உ
சிவமயம்

# சிவபூமி

**Religious Journal of sivapoomi**

அறிமுக விலை:- 20/=


தொலைபேசி -021-222-7938

Email-Sivapoomi@gmail.com

சிவம்-01 | ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 17ஆம் நாள் 01.03.2018 | பூமி-01


## அமெரிக்கா ஹவாய் ஆதீன முதல்வர் சற்குரு வேலன் சுவாமிகள் யாழ் வருகை


தவத்திரு யோகர்சுவாமிகளின் அருளாசியால் அமெரிக்கா ஹவாயில் உருவாகிய சைவ ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வர் சற்குரு போதிநாத வேலன் சுவாமிகளும், ஆதீன துறவறச்சபைத் துறவிகள் உட்பட அறுபது சைவ அன்பர்களும் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். தவத்திரு யோகர்சுவாமிகளிடம் அருள்பெற்று துறவு வாழ்வு வாழ்ந்த சற்குரு சுப்பிரமுனிய சுவாமிகளால் அமெரிக்கா ஹவாயில் ஆரம்பிக்கப்பட்ட சைவ ஆதீனம் இன்று உலகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றது. சுப்பிரமுனிய சுவாமிகள் மகாசமாதி அடைந்த பின் குரு முதல்வராகப் பொறுப்பேற்று ஆதீனத்தை நடாத்தி வரும் அமெரிக்கரான போதிநாத வேலன் சுவாமிகள் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். பதினாறுக்கு மேற்பட்ட துறவிகள் இவ்வாதீனத்தில் ஆன்மீகப் பணியாற்றி வருகின்றார்கள். யாழ்ப்பாணம் கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் இவ்வாதீனத்தில் ஆன்மீகப் பயிற்சி பெற்று சைவசமயப் பணிகளையும் சமூகப் பணிகளையும் ஆற்றி வருவது குறிப்பிடத்தக்கது. சுவாமிகளும் அவருடன் வந்த அன்பர்களும் யாழ்ப்பாணத்தில் கடந்த ஐந்து. தினங்கள் ஆலயங்களையும் சமய நிறுவனங்களையும் தரிசித்து வருகிறார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹவாய் ஆதீன சுவாமிகள் யாழ் வருகை படங்கள்......












ஹவாய் ஆதீனத்தை ஆரம்பித்த
குரு முதல்வர் சற்குரு சுப்ரமுனிய சுவாமிகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபூமி

சிவம்-01 01.03.2018 பூமி-01

சிந்தனை செய்வோம்.


## காலத்தை தவப்பொழுதாக மாற்றுவோம்!

ஈழத் திருநாட்டை சிவபூமி என விளித்தவர் திருமூலர் சுவாமிகள். இலங்கை முழுவதும் சிவாலயச் சிறப்பும் செந்தமிழ் மணமும் மேலோங்கி விளங்கிய காலம் ஒன்றிருந்தது. இதிகாசங்கள், புராணங்கள் என்பன இலங்காபுரியாகிய இலங்கையின் மேன்மையை அழகாக எடுத்துரைக்கின்றன. காலத்துக்குக் காலம் அந்நிய படையெடுப்புகளால் செழிப்புற்ற சிவபூமி சொல்லொண்ணா பாதிப்புக்களை சந்தித்துவிட்டது.

இலங்கையின் கடல் எல்லையில் ஐந்து ஈஸ்வரங்கள் நல்லாட்சி செய்வதை வரலாற்றாளர்கள் ஒப்புக்கொள்வர். இந்த பஞ்ச ஈஸ்வரங்களில் நான்கு இப்போது சாட்சியாக விளங்குகின்றன. தொல்லியல் தேடல்களின் போது மண்ணிலிருந்து சிவலிங்கங்களும், நாகலிங்க வழிபாட்டு அடையாளங்களும் ஆய்வாளர்களுக்கு கிடைத்திருக்கின்றன. சில ஆய்வாளர்கள் அவற்றை வெளிப்படுத்துவதில்லை. என் செய்வோம்?

இலங்கையை இராவணன் ஆட்சிசெய்வதற்கு முன் குபேரன் சிறப்பாக ஆண்டதாக புராணங்கள் கூறுகின்றன. இலங்கைவேந்தன் குபேரனிடம் கடன் பெற்று திருப்பதியில் கோயில் கட்டியதாக ஒரு வரலாறு சொல்கிறது. கடனை மீளளிப்பதற்காக வைத்த உண்டியலுக்கு குபேர உண்டியல் என திருப்பதி உண்டியலை அழைப்பதுண்டு.

இன்று நமது ஈழநாட்டில் சைவசமயம் பல்வேறு இன்னல்களை சந்தித்துவருவது யாவரும் அறிந்ததே.சைவசமயத்துக்கும் பௌத்த மதத்திற்கும் மிக நெருக்கமான தொடர்புகள் உண்டு. காலமாற்றங்களும், அரசியல் சூழ்நிலைகளும் மோதல்களை உருவாக்கி யிருப்பதால் சமூகம் தொடர் இன்னல்களை அனுபவித்து வருகின்றது. இந்நிலை மாற வேண்டும். அனைவரும் சகல உரிமைகளுடனும் அமைதியாக வாழ்வதற்கு நல்லதோர் சூழல் உருவாகவேண்டும்.

ஆதியும் அந்தமும் இல்லாத சமயம் சைவம். மூத்தமொழியான தமிழையும் இனத்தையும் காப்பாற்றவேண்டும் என்றால் இம் மொழியின் மூலவேரான சைவசமயம் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். சைவத் தமிழ் மக்களிடையே சமயப்பற்று அதிகரிக்க வேண்டும். எம்முன்னோர் பேணிப் பாதுகாத்த சமய வாழ்வை எங்கள் சந்ததி தொடர்வதற்கு வழி செய்யப்படவேண்டும்.

சைவ மக்கள் வாரத்தில் ஒருநாள் குறிப்பாக வெள்ளிக்கிழமைகளில் ஆலய வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். சகல கருமங்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு குடும்பசகிதமாக கோயில் வழிபாட்டில் ஈடுபடுதல் வேண்டும். இப்போது கோயில் வழிபாட்டில் ஈடுபடுபவர்களின் தொகை மிகவும் குறைவாகவே இருக்கிறது. இந்த நிலை மாறவேண்டும்.வாழ்நாளில் இறை வழிபாட்டுக்கு நாம் ஒதுக்கும் நேரம் தவப்பொழுதாகும். எனவே அவப்பொழுதாக காலத்தைக் கழிக்காமல் தவப்பொழுதையும் நாம் தேட வேண்டும்.

**பாலன் இளையன் விருத்தன் எனநின்ற**
**காலம் கழிவன கண்டும் அறிகிலார்**
**ஞாலம் கடந்து அண்டம் ஊடறுத்தான்அடி**
**மேலும் கிடந்து விரும்புவன் நானே**

**(திருமந்திரம்)**

# சிவபூமியின் உதயம்

இந்த மாதத்திலிருந்து மாதாந்த செய்திப் பத்திரிகையாக உதயமாகியிருக்கும் சிவபூமி யின் முதலாவது இதழ் உங்கள் கரங்களுக்கு கிடைத் திருக்கிறது. சிவபூமி அறக்கட்டளையின் வெளியீடாக சிவபூமி ஒவ்வொரு மாதமும் மலருவதற்கு திருவருள் கைகூடியிருப்பது மகிழ்சிக்குரியது.

இந்து சமயம்,சமூகம் சார்ந்த விஷயங்களை தாங்கிய வண்ணம் குறிப்பாக சமயக் கட்டுரைகள், கவிதைகள், ஆலய உற்சவங்கள் தொடர்பானதும் சமய நிகழ்வுகள் சம்பந்தப்பட்டதுமான செய்திகள், படங்கள், இந்துக்களின் விசேட தினங்கள் தொடர்பான சிறப்புக் கட்டுரைகள் போன்ற பல விஷயங்களை சிவபூமி ஊடாகத் தருவதற்கு விரும்புகிறோம்.

ஆலயங்களின் அறங்காவல் சபை, பரிபாலன சபை மற்றும் ஆலய பிரதம குருமார்கள் தங்கள் ஆலய உற்சவங்கள் தொடர்பான அறிவித்தல் பிரசுரங்களை அல்லது ஆலய கடிதத் தலைப்பில் அத்தகைய விபரங் களை எழுதி சிவபூமி பத்திரிகைக்கு அனுப்பி வைத்தால் அவற்றை வெளியிடுவதற்கு தயாராக இருக்கின்றோம்.

இந்து மக்களாகிய நீங்கள் தரும் ஆதரவும் ஒத்துழைப்பும் சிவபூமி செய்திப் பத்திரிகையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்பது எங்கள் எதிர்பார்ப்பும் நம்பிக்கையுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாவலர் பெருமானும் சிதம்பரத்து கல்விப்பணியும்

- கலாநிதி ஆறு.திருமுருகன் -

ஈழத்திருநாடு செய்த மாதவத்தால் உதித்தவர் நல்லைநகர் நாவலர் பெருமான். இப்பெருமகன் ஈழத்துக்கு மட்டும் அன்றி முழுசைவத்தமிழ் உலகத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றியவர். நைஸ்டிக பிரம்மச்சரிய வாழ்வை மேற்கொண்ட இப்பெருமகன் ஐம்பத்தாறு வருடங்கள் மட்டும் இம்மண்ணில் வாழ்ந்தவர். இவரது காரியங்கள் ஏராளம். திரிகரணசுத்தி காரியசித்தி என்பார்கள். அவர் செய்த காரியங்கள் யாவும் வெற்றி பெற்றமைக்கு அடிப்படைக் காரணம் இவரின் தூய அர்ப்பணிப்பு மிக்க வாழ்வு என்றால் மிகையாகாது.

ஒத்ததறிவா னுயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்

என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய வாழ்ந்த பெருமகன் இவர். காலத்துக்கு ஏற்றவகையிலான நற்காரியங்களைச் செய்து கடவுள் நிலையில் சமூகத்தால் போற்றப்படுகின்ற பாக்கியம் பெற்றவர். ஈழத்திருநாட்டில் கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதிக்கம் தலைவிரித்தாடிய காலத்தில் சைவத் தமிழர்களுக்காக துணிந்து நின்று போராடியவர் இவர். வாய்ச்சொல் வீரராக மட்டும் இருந்துவிடாமல் சைவத்தையும் தமிழையும் வாழவைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திய தீர்க்கதரிசி என வரலாற்றுலகம் இவரைப் போற்றுகிறது.

சுதேசிகளுக்கு சொந்தப் பாடசாலை அமையவேண்டும் என்பதற்காக துணிந்து செயற்பட்டவர். யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் முதல்முதலில் சைவப்பிரகாச வித்தியாசாலையை தோற்றுவித்து வெற்றி கண்டவர். தனவந்தர்களே, சமய ஆர்வலர்களே ஊர்தோறும் சைவப் பாடசாலைகளையும் சைவ உயர்நிலைப் பள்ளிகளையும் ஆரம்பியுங்கள் என அறைகூவல் விடுத்தார். நாவலரின் வேண்டுதலால் பல சைவப் பாடசாலைகள் ஊர்தோறும் தோற்றம் பெற்றன. நாவலரின் வேண்டுதலால் அவர் மறைந்த பின்பு இந்துக் கல்லூரிகள் பல ஊர்களில் எழுந்தன. ஈழத்து கல்வி வளர்ச்சியின் கலங்கரை விளக்காக நாவலர் பெருமான் விளங்கினார்.

## நாவலரும் சிதம்பரமும்

நாவலர் பெருமான் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். அவரது திறமையைப் பயன்படுத்தி பைபிளை தமிழில் மொழிபெயர்ப்பதற்காக பர்சிவல் பாதிரியார் நாவலரை இந்தியாவுக்கு அழைத்து வந்தார். நாவலரின் புலமையால் பைபிள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு சைவத் தமிழர்களை மதம் மாற்றுவதற்கு மிஷனரியினர் பயன்படுத்தியதைக் கண்டு கவலையுற்ற நாவலர் தனது ஆசிரியப் பதவியைத் துறந்து சைவத்தமிழைக் காக்கப் புறப்பட்டார். அதற்காக கல்விச்சாலையை நிறுவிய நாவலர் சைவ சமய நூல்களை, பிரசுரங்களை வெளியிட்டு மக்களை நெறிப்படுத்த வேண்டும் என ஆவல் கொண்டார். அதற்காக இந்தியாவில் அச்சு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு புறப்பட்டார். ஆச்சு இயந்திரத்தை வாங்கிய நாவலர் தானே அதை இயக்குவதற்கும் கற்றுக்கொண்டார்.

சிதம்பர திருத்தலத்தின்மீது ஈழத்தமிழர்கள் பூர்வீகமாகவே உயர்ந்த பக்தி கொண்டவர்கள். நாவலரின் மூதாதையர்கள் காலத்துக்குக்காலம் சிதம்பர தரிசனம் செய்பவர்கள். ஈழநாட்டில் பலர் தங்கள் நிலபுலங்களின் ஒரு பகுதியை சிதம்பர திருக்கோவிலுக்கு தானமாக கொடுக்கும் வழக்கம் இருந்தது. வாரந்தோறும் சிதம்பரத்திற்கு அபிஷேகத் திரவியங்கள் சேகரிக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பப்பட்டு வந்தது என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பசுந்தீவு எனக் கூறப்படும் நெடுந்தீவில் இருந்தும், சுழிபுரத்தில் இருந்தும் பால், தயிர் போன்ற அபிஷேகப் பொருட்கள் வாரந்தோறும் சிதம்பர தீட்சிதர்களுக்கு கொண்டு சென்று கொடுக்கும் நெறிமுறை எம் மண்ணில் நீண்டகாலம் இருந்ததாக அறியப்படுகின்றது.

இவற்றைக் கருத்தில் கொண்டு சிதம்பர தரிசனத்துக்கு சென்ற நாவலர் பெருமான் சிதம்பரத்தில் தன்னை மறந்து வழிபாடு செய்தார். தில்லைவாழ் அந்தணர்களாகிய மூவாயிரவர் குடும்பத்தவர்களையும் சந்தித்தார். எனினும் சிதம்பரத்து ஆலய சூழலில் வாழ்பவர்கள் சைவப் பாரம்பரிய நூல்களை, நெறிமுறைகளை கற்கும் வாய்ப்பின்றி இருப்பது கண்டு நாவலர் பெருமான் கவலையுற்றார். உயர்ந்த தீட்சித பரம்பரையில் வந்தவர்கள் சிலர் ஆசாரத்தை பேணாது, கோயில் சுற்றாடலில் அவர்களுக்குரிய பக்குவத்தை மறந்து வாழ்வது கண்டு நாவலரின் உள்ளம் வேதனையுற்றது. இளமைத்துடிப்பு மிக்க நாவலர் பெருமான் தான் வாங்கிய அச்சு இயந்திரத்தில் சிதம்பரத்து தீட்சிதர்களுக்காக ஒரு பிரசுரம் அடித்து வெள்ளிக்கிழமை நன்னாளில் சிதம்பரத்தில் விநியோகித்தார். சிலர் நாவலரது கருத்தை ஏற்றுக்கொண்டனர். சிலர் எதிர்த்தனர். சில பெரியார்கள் நாவலரை சந்தித்து புலமையும், துணிவும்மிக்க நீர் சிதம்பரத்தில் தங்கியிருந்து எதிர்கால சிறார்களுக்கு கல்வி வழங்க வேண்டும் என வேண்டுதல் விடுத்தனர்.

பலரது வேண்டுதலை உள்வாங்கிய நாவலர் பெருமான் தாயகம் திரும்பிய பின்பு சிதம்பரத்தில் பாடசாலை உருவாக்க வேண்டும், அப்பாடசாலையில் சைவ சமய தத்துவங்கள், திருமுறைகள், புராண இதிகாசங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என சிந்தித்தார். அவரது சிந்தனையின் விளைவாக எழுந்ததே சிதம்பரம் நாவலர் உயர்நிலைப்பள்ளி ஆகும். 2014ஆம் ஆண்டு அகவை நூற்றிஐம்பதை சந்தித்துள்ள இப்பாடசாலை நாவலர் பெருமானின் அயராத முயற்சியினால் தோற்றம் பெற்றது.

இப்பாடசாலையைக் கட்டுவிக்க நாவலருக்கு பலர் உதவினர். யாழ்ப்பாணம் பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய அறங்காவலர் முதல் இணுவிலில் வாழ்ந்த சைவவித்தகர் நடராச ஐயர் வரை பலர் உதவினர். சிதம்பரத்தில் நாவலர் பெருமான் கட்டிய பாடசாலைக்கு ஆரம்பத்தில் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயரே சூட்டப்பட்டது. நாவலர் பெருமானின் மறைவுக்கு பின்னர் சிதம்பரம் பாடசாலையை நிர்வகித்து வந்த பெரியவர்கள் நாவலர் பாடசாலை எனப் பெயர் மாற்றம் செய்தனர்.

சிதம்பரம் சைவ வித்தியாசாலையை நிறுவுவதற்காக 1862 மே மாதம் யாழ்ப்பாணத்தில் அவர் ஆரம்பித்த சைவப்பிரகாச வித்தியாசாலையில் விசேஷ பிரசங்கத்தை நடத்தினார். சிதம்பரத்தில் பாடசாலை அமைப்பதன் நோக்கத்தினை பிரசுரமாக வெளியிட்டார். 1864 அக்டோபர் 28ஆம் திகதி சிதம்பரம் பாடசாலை பூரணத்துவம் பெற்றது. நாவலரின் குறிக்கோளை அவர் ஆரம்பித்த சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை பேணிப் பாதுகாத்து வந்தது. சிதம்பரம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் பல நல்ல காரியங்களை சிதம்பரம் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு நாவலர் பெருமான் நிறைவேற்றினார். 1864இல் திருவிளையாடல் புராண வசனம் அச்சிடல், சேதுபுராணம், இலக்கண விளக்க சூறாவளி அச்சிடல் 1866இல் அருட்பா பதிப்பு என்பன வெளிவந்தன.

சிதம்பரத்தில் ஒரு பகுதியில் ஆடு வெட்டி வேள்வி செய்யும் நடைமுறை இருந்தது. இதனைத் தடுப்பதற்கு பெருமுயற்சி எடுத்தார். அம்முறையை மாற்றுவதற்கு ஏதுவாக இருந்தார். சிதம்பரத்தில் நாவலர் பெருமான் செல்வாக்கு இக்காலத்தில் அதிகரித்தது. திருத்தொண்டை நாட்டு புண்ணிய பரிபாலனசபை தலைவராக நாவலர் பெருமானை நியமித்தனர்.


1867 ஆனி மாதம் சிதம்பர மும்மணிக்கோவையை பதிப்பித்து சிதம்பரத்தில் வெளியிட்டார். தொடர்ந்து கோயிற்புராண உரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதம்பரத்தில் வெளியிடப்பட்டது. 1869ஆம் ஆண்டு சிதம்பரத்திலும் வேதாகம பாடசாலை மடம் என்பன நிறுவ பிரசுரம் வெளியிட்டார். 1870 பெப்ரவரி 27ஆம் திகதி வரை ஆறு ஆண்டுகள் சிதம்பரத்தில் தங்கியிருந்து சைவப்பிரகாச வித்தியாசாலையின் வளர்ச்சியிலும், சைவத்தமிழ் நூல் வெளியீட்டிலும் அயராது பாடுபட்டார். நாவலரின் சிந்தனைகள் வீண் போகவில்லை. தன்னை அர்ப்பணித்து அவர் சிதம்பரத்தில் உருவாக்கிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் நூற்றிஐம்பதாவது ஆண்டு பூர்த்தி விழா கொண்டாடப்பெற்றது பெருமைக்குரிய விடயம் ஆகும். நாவலரின் உயர்நிலைப்பள்ளியை தன் தள்ளாடும் வயதிலும் கண்ணை இமை காப்பதுபோல காத்துவரும் சிதம்பரம் ஸ்ரீமான் திரு.க.சுவாமிநாதன் மற்றும் வைத்தியகலாநிதி சு.அருள்மொழிச்செல்வன் குடும்பத்தவர்களுக்கும் ஈழத்திருநாடு என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது. சூரிய, சந்திரர் உள்ளவரை நாவலரால் உருவாக்கப்பட்ட பாடசாலை வாழ வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

(நன்றி-சிதம்பரம் ஆறுமுகநாவலர் பள்ளிகள் - 150ஆவது ஆண்டுவிழா மலர்-2014)

# சிவபூமி முதியோர் இல்லம்





ஆதரவற்ற முதியவர்களுக்காக யாழ்ப்பாணம் சுழிபுரம் தொல்புரத்தில் 07.04.2007 இல் சிவபூமி முதியோர் இல்லம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வில்லம் ஆரம்பிப்பதற்கு பேருதவி புரிந்தவர் அமெரிக்காவில் வாழும் அன்பர், கந்தரோடை, திரு.கிருஸ்ணர் பாலச்சந்திரன் அவர்கள். இல்லத்தில் சகல வசதிகளுடன் ஆதரவற்ற 79 முதியோர்கள் (ஆண் பெண் இருபாலாரும்) மகிழ்வுடன் வாழ்கிறார்கள். சிவபூமி முதியோர் இல்லத்தில் அழகான ஆலயம் அமைந்துள்ளது. பெரிய மாடிக்கட்டடமான பாலச்சந்திரன் மண்டபம் பிரதான மண்டபமாகவும், ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மண்டபம், திருநெல்வேலி அமரர் பத்மநாதன் நினைவு மண்டபம், காரைநகர் வைத்திய கலாநிதி யமுனா மார்க்கண்டு நினைவு மண்டபம், யோகர் சுவாமி மண்டபம் மற்றும் மலேசியா மகேஸ்வரி அம்மாள் மண்டபம் ஆகிய மண்டபங்கள் சகல வசதிகளுடனும் அமைந்துள்ளன. இவற்றுடன் அறிவாலயம் (நூலகம்), மருத்துவ விடுதி, திரையரங்கு, கலையரங்கு, பொழுதுபோக்கு மண்டபம், கோசாலை என பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் ஆன்மீக சுற்றுலா என பல வசதிகள் செய்யப்பட்ட நிலையில் சிவபூமி முதியோர் இல்லத்தில் முதியவர்கள் இனிதே வாழ்ந்து வருகிறார்கள்.

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதும் ஓர் குறைவிலை
கண்ணில் நல்அஃதுறும் கழமல வளநகரப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவெட்டியிலிருந்து அமெரிக்கா வரை சைவம்

*- ரிஷி.தொண்டுநாதன் சுவாமி -*

இலங்கையின் வடபகுதியிலுள்ளது அளவெட்டி கிராமம். இதற்கும் அமெரிக்காவிற்கும் என்ன தொடர்பு என பலரும் வியப்புடன் கேட்கலாம். யாழ்ப்பாணத்து மாமுனிவர் எனப் போற்றப்படும் தவத்திரு யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு துறவற நிலையடைந்த அமெரிக்க இளைஞர் ஒருவரின் ஆன்மீகப் பணியின் முதற்கட்டமாக அளவெட்டி கிராமத்தில் ஆச்சிரமம் ஒன்றையும், அதனைத் தொடர்ந்து அமெரிக்காவில் சைவ ஆதீனமொன்றையும் நிறுவியிருப்பது, ஒரு வரலாற்றுப் பதிவாக அமைந்துள்ளது.

யோகர் சுவாமிகளின் பெருமையைக் கேள்வியுற்ற ஆன்மீகத் தாகம் கொண்ட 21 வயதுடைய அமெரிக்க இளைஞர் ஒருவர் 1949 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். கொழும்பில் தங்கியிருந்த இவரை, அளவெட்டியைச் சேர்ந்த கந்தையா செட்டியார் என்ற சைவப்பெரியார் சந்தித்தார். இவரிடம் அந்த அமெரிக்க இளைஞர் ஒரு குருவை தேடி வந்திருப்பதாகச் சொன்னார். கந்தையா செட்டியார் அந்த அமெரிக்க இளைஞரை, யாழ்ப்பாணம் அழைத்து வந்து, அளவெட்டியிலுள்ள தனது வீட்டில் தங்கவைத்து சைவத் தமிழ் கலாசாரத்தையும் சமய நெறி முறைகளையும் கற்றுக் கொடுத்தார். தினமும் அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோயிலுக்குச் சென்றும் வழிபடச்செய்தார். அந்த அமெரிக்க இளைஞர் சமய அனுட்டானங்களில் பக்குவநிலை அடைந்ததும் இவரை ஒருநாள் வைகாசி பூரணை தினத்தன்று கந்தையா செட்டியார் யோகர் சுவாமிகளிடம் அழைத்துச் சென்றார்.

அந்த அமெரிக்க இளைஞரின் வருகையை எதிர்பார்த்திருந்த யோகர் சுவாமிகள், அவரை தனது சீடர்களுள் ஒருவராக ஏற்று, சுப்பிரமுனி எனும் நாமாகரணம் சூட்டி, புனித சந்நியாச தீட்சையை வழங்கினார். யோகர் சுவாமிகள் இவரது முதுகில் ஓங்கி அடித்து "இனி உலகெங்கும் சென்று சிங்கம்போல் கர்ச்சிப்பாய். நீ பல ஆலயங்களை அமைத்துப் பலருக்கு உணவளிப்பாய்" என்று ஆசி வழங்கினார். இந்த அடியானது அந்த அமெரிக்க இளைஞரை நாதசித்தர் மரபில் சேர்க்கும் தீட்சையாக அமைந்தது.

யோகர் சுவாமிகளின் ஆசியைப் பெற்றுக் கொண்ட அந்த இளைஞர் சுப்பிரமுனிய சுவாமிகளாக இந்து மக்களால் போற்றித் துதிக்கப்பட்டார். அந்தக் காலப்பகுதியில் தான் அளவெட்டி கிராமத்தில், யோகர் சுவாமிகளின் ஆசியுடன் ஆச்சிரமமொன்றையும், அங்கு பசுபதீஸ்வரர் ஆலயத்தையும் ஸ்தாபித்தார். இன்று உலகளாவிய ரீதியில் சேவையாற்றிவரும் சைவ சித்தாந்த தர்மசபை அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தில் தான் ஆரம்பமாகியிருப்பது சிறப்புக்குரியது.

யோகர் சுவாமிகளின் ஆணைப்படி அமெரிக்கா திரும்பிய சுப்பிரமுனிய சுவாமிகள், அங்கு செய்ய வேண்டிய பணிகளுக்கு தன்னை ஆயத்தமாக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டார். 1957 ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் சுவாமிகள் இமாலய கலாபீடத்தை நிறுவியதுடன், கலிபோர்னியாவில் அமெரிக்காவின் முதலாவது இந்துக் கோயிலையும் ஸ்தாபித்ததன் ஊடாக மேலைநாட்டில் அவரது ஆன்மீகப் பணி ஆரம்பமானது. அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஒன்றான குவை எனும் பகுதியிலுள்ள புனித வைலுவ நதிக் கரையிலுள்ள பெரும் நிலப்பரப்பில் 1970 ஆம் ஆண்டு சைவ ஆதீனத்தை நிறுவினார். இங்கு ஆறு அடி உயரமான நடராஜப் பெருமானை மூல மூர்த்தியாகக் கொண்ட ஆலயத்தையும் அமைத்தார். இதுவே மேலைத் தேசத்தில் தோற்றம் பெற்ற முதலாவது சிவன் கோயிலாகவும் சிறப்பு பெற்றுள்ளது.

1975ஆம் ஆண்டு மாசி மாதம் சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு சிவபெருமான் ஓர் அகக் காட்சியை அருளினார். இதன்படி புனித வைலுவ நதிக் கரையில் சுயம்புலிங்கமொன்றைக் கண்டார். இதனை மையமாகக் கொண்டே சன்மார்க்க இறைவன் கோயிலை முற்றிலும் கருங்கற்களைக் கொண்டு உருவாக்கு வதற்கான ஏற்பாடுகளை சுவாமிகள் மேற்கொண்டார். அதற்கான பணிகள் இடம்பெற்று வரும் வேளையில், 1987ஆம் ஆண்டு ஆவணி மாதத்தில் இங்கு பிரதிஸ்டை செய்வதற்காக ஆறுகோணங் களைக் கொண்டதும், 39 அங்குல உயரமானதுமான ஸ்படிகலிங்கமொன்றும் சுவாமிகளுக்கு கிடைத்தது. ஆலயம் அமைக்கப்பட்டுவரும் வளாகத்தில், நூற்றெட்டு வில்வ மரங்களின் மத்தியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சுயம்புலிங்கேஸ்வரருக்கு நித்திய பூசைகள் இடம் பெற்று வருகின்றன.

சுப்பிரமுனிய சுவாமிகள் 1979ஆம் ஆண்டு ஹின்தூசியம்ருடே (Hinduism Today) எனும் பெயரிலான சஞ்சிகையொன்றை ஆரம்பித்து வைத்தார். ஹவாய் சைவ ஆதீன வெளியீடான இச்சஞ்சிகை சர்வதேச ரீதியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

இந்துக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்து சமயம் சார்ந்த பல நூல்களையும் சுவாமிகள் எழுதியிருக்கிறார்.

1982 ஆம் ஆண்டில் சுவாமிகளால் யாழ் குடாநாட்டிலுள்ள கோப்பாய் கிராமத்தில் சுப்பிரமுனிய கோட்டம் ஸ்தாபிக்கப்பட்டதுடன் அங்கு சாந்திலிங்கேஸ்வரர் திருக்கோயிலும் தோற்றம் பெற்றது. 1983 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பின் சுவாமிகள் இலங்கைத் தமிழ் அகதிகள் நிவாரண நிதியமொன்றை ஆரம்பித்து, அதனூடாக ஏராளமான பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கியிருப்பதையும் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

சுப்பிரமுனியசுவாமிகளது சமய, சமூகநலப் பணிகளின் மற்றொரு செயற்பாடாக இந்து கலாசார அறக்கட்டளையை உருவாக்கி, அதனூடாக உலகளாவிய ரீதியில் அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் போன்றவற்றுக்கும் உதவி வந்திருப்பதையும் சொல்லலாம். இந்த அறக்கட்டளை ஊடான மேலான பணிகள் ஹவாய் சைவ ஆதீனத்தால் இப்போதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. 1986 ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற உலகசமய பாராளுமன்ற நிகழ்வின்போது, சுவாமிகளது உலகளாவிய சமய, சமூகப் பணிகளை பாராட்டி "ஜகதாச்சரியார்" என்ற விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். சுவாமிகளுக்கு 2000 ஆம் ஆண்டு ஐக்கியநாடுகள் சபையினால் முன்னாள் செயலாளர் யூதாண்ட் ஞாபகார்த்த சமாதான விருதும் வழங்கப்பட்டதுடன், ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற உலக சமாதான மாநாட்டிலும் கலந்து கொண்டு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது.


சுப்பிரமுனியசுவாமிகள் 2001 நவம்பர் 12 ஆம் திகதியன்று நள்ளிரவு ஹவாய் சைவ ஆதீனத்தில் மகாசமாதியடைந்தார். இவருக்குப் பின், இவரது பிரதம சீடராக விளங்கிய போதிநாத வேலன் சுவாமிகள் ஹவாய் சைவ ஆதீனத்தின் முதல்வராகப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன், சமயசமூகப் பணிகளையும் முன்னெடுத்து வருகிறார்.

வேலன் சுவாமிகள் 65 அடியவர்கள் சகிதம் திருத்தல யாத்திரையாக கடந்த மாசி மாத இறுதியில் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். யாழ் குடாநாட்டுக்கு வந்த சுவாமிகள், தனது குருநாதரால் ஸ்தாபிக்கப்பட்ட அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரம ஸ்ரீசுபதீஸ்வரர் ஆலயத்திற்கும், கோப்பாய் கிராமத்திலுள்ள ஸ்ரீசுப்ரமுனிய கோட்டத்திற்கும் வருகைதந்ததுடன், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற பூசைவழிபாடுகளிலும், குடாநாட்டிலுள்ள பலசமய நிறுவனங்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவேற்பு நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.

## ஜீவசேவைக்காக கந்தரோடையில்
## சுகாதார நலன்புரி நிலையம்

கந்தரோடையில் பிறந்து அமெரிக்காவிலும், இலண்டனிலும் வாழும் இரு கல்விக் குடும்பத்தவர்களின் அன்பளிப்பில் இப் புதிய நிலையம் பல லட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. மருத்துவ நிபுணர்கள் சேவை அடிப்படையில் மக்களுக்கு உதவுவதற்காக இக்கட்டடம் உருவாக்கப்பட்டுள்ளது . அமரர்கள் கிருஷ்ணர் சரஸ்வதி தம்பதிகள் நினைவாகவும் கதிர்காமநாதன் சறோயினி தேவி தம்பதிகள் நினைவாகவும் அவர்களின் பிள்ளைகள் வைத்திய நிபுணர் க.தேவகாந்தன் தனலட்சுமி தம்பதிகளும், கலாநிதி பாலேந்திரன் அஜந்தா தம்பதிகளும் தங்கள் சொந்தச் செலவில் இக்கைங்கரியத்தை நிறைவேற்றியுள்ளனர். சைவ மக்களின் இப்புனித பணி போற்றுதலுக்குரியது எனப்பலரும் பாராட்டியுள்ளனர். எதிர்வரும் பங்குனி மாதம் உத்தர நட்சத்திர நன்னாளில் மேற்படி நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

## கம்பவாரிதி ஜெயராஜ் இந்தியா பயணம்



*தருமை ஆதீனம் நடாத்தும் ஐந்தாவது அனைத்துலகச் சைவ சித்தாந்த மாநாட்டில் 08.03.2018 வியாழக்கிழமையன்று கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் சிறப்புரை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளார்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி

**- சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் -**

(திருக்கேதீச்சர ஆலயப் புனருத்தாரணச் சபைத் தலைவராய் விளங்கிய சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்கள் மலாய் நாட்டுச் சைவ அன்பர்களுக்குச் சுற்று நிருபமாக பின்வருங் கடிதத்தை 1949 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 30ஆம் திகதி ஆசிரியர் த.மயில்வாகனம் மூலம் அனுப்பினார். ஆலயத் திருப்பணிச் சபையொன்றை ஏற்படுத்திப் பொருள் சேகரித்து கௌரி அம்பாள் கோயிலைக் கருங்கல் திருப்பணியாகச் செய்வதாகத் தீர்மானித்தார்கள்). (இது கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திருப்பணிவேலைகள் சம்பந்தமானது)

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் தேவாரம் பாடிய சிவஸ்தலம் இலங்கையிலே ஒன்றுதானுள்ளது. அது மன்னாருக்குச் சமீபத்திலுள்ள திருக்கேதீச்சரம். இது நெடுங்காலமாயழிந்திருந்தது. ஆறுமுக நாவலர் பெருமான் இதைப் புதுக்கக் கட்டுவதற்காக அந்த இடத்தை விலைக்குத் தரும்படி அரசினரைக் கேட்டபோது அவர்கள் மறுத்துவிட்டார்கள். பின்பு சேர் இராமநாதன் முதலியோரது முயற்சியினாலே, அது அரசிடம் வாங்கப்பட்டது. அந்த இடத்திலே ஒரு கோயில் கட்டி நாற்பது வருடங்களின் முன் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அது செங்கல்லாற் கட்டப்பட்டபடியால் அது இப்போது பழுதடைந்திருக்கின்றது. அதைக் கருங்கல்லாற் கட்டவேண்டுமென்ற எண்ணம் இப்போது இவ்வூரில் தோன்றியிருக்கிறது. இதைக்கட்டி முடித்தற்காகத் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று ஆக்கப்பட்டிருக்கிறது. கருங்கல்லாற் கட்டுதற்கு மூன்று லட்சம் ரூபா வரையிலே மதிக்கப் பட்டிருக்கிறது. இப்போது பணம் சேர்க்கும் முயற்சி தொடங்கிவிட்டது. கோயிலுக்குப் பக்கத்திலே இப்போது ஒரு விசாலமான மடம் 5000 ரூபாய் செலவு செய்து கட்டப்பட்டுவிட்டது. இது எங்களுக்குள்ளே சிலர் சேர்த்துக் கட்டியது. ஊர்ப்பொருளாற் கட்டியதன்று. கோயிலுக்காக ஒருவர் 2500 ரூபாய் கொடுத்தார். ஏழுபேர் ஒவ்வொருவரும் 1001 ரூபா கொடுத்திருக்கிறார்கள். மலாய் நாட்டிலும் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று ஆக்கப்படுதல் நல்லது. சம்பந்தசுவாமியும், சுந்தரமூர்த்திசுவாமியும் பாடிய ஸ்தலம் மிகச்சிறப்பாக இருத்தல் வேண்டும். அவர்களுடைய பெருமையை நிலைநாட்டுவதற்காகச் சைவசமயத்தவர் ஒவ்வொருவரும் முயற்சி செய்தல் பெருங்கடனாகும். அவர்களுக்காகவே அன்றி எமது நாடாகிய இலங்கைக்காகவும் இக்கோயிலிலே எங்களுடைய மனம் முழுவதும் செல்லவேண்டும். சம்பந்தசுவாமிகள் தேவாரம் பாடிய ஸ்தலங்கள் இந்தியாவிலே முந்நூறு வரையில் உண்டு. சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய ஸ்தலங்கள் இந்தியாவிலே நூறு வரையிலுண்டு.

இவர்கள் பாடிய ஸ்தலம் இலங்கையிலே திருக்கேதீச்சரமாகிய ஒன்றேயாம். இலங்கையினுடைய பெருமைக்காகவும் இலங்கையைச் சேர்ந்த சைவசமயத்தவர் யாவரும் இக்கோயிலை உன்னத நிலையில் வைத்தல் வேண்டும். இதற்குப் பொருளுதவலும் வேறு, மற்றைய கோயில்களுக்குப் பொருளுதவுதலும் வேறு. ஆயிரம் ரூபா நோட்டும் கடதாசித் துண்டுதான். காற்சதத்துக்கு வாங்கும் கடதாசித் துண்டும் கடதாசிதான். இவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசமென்ன என்றால், நோட்டில் இவருடைய (Commissioners of currency) கையெழுத்துக்கள் உண்டு. மற்றக் கடதாசியிலே அவர்களுடைய கையெழுத தில்லாமை. Commissioners of currency 'The Government promises to pay Rs.1000 என்று சொல்லுவதுபோல, சம்பந்தசுவாமியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருக்கேதீச்சரநாதர் அடியவர்களுக்கு அருள் செய்வார்" ("தொண்டர் நாள்தோறும் துதிசெய அருள் செய் கேதீச்சரமது தானே") என்று சொல்லியருளினார். அன்றியும், இக்கோயில் சூரபன் மனுடைய காலத்துக்கும் மிகவும் முந்தியது. இக்கோயிலிருக்குமிடத்துக்கு மாதோட்ட நகரம் என்று பெயர். இந்த இடத்துக்கு இந்தப் பெயர் வந்த காரணம் என்னவென்றால், சூரபன்மனுடைய மனைவியுடைய தகப்பனுடைய தகப்பன் துவட்டா என்பவர் நெடுங்காலம் பிள்ளையில்லாமையினாலே திருக்கேதீச்சரத்திலே தவம் செய்து புத்திர பாக்கியம் பெற்று அங்கேயொரு நகரத்தையுண்டாக்கி வாழ்ந்தார். அவருண்டாக்கிய நகரமாதலால், அதுக்கு மாதுவட்டா நகரம் என்று வந்தது. இந்தச் சரித்திரம் தட்சண கைலாச புராணத்திலுள்ளது. இக்கோயிலுக்குத் தட்சண கைலாசம் என்ற பெயருமுண்டு. இக்கோயிலுக்கு இருவரும் பாடியருளிய தேவாரங்களும் அவற்றின் உரையும் கோவிலின் மகிமையும் சேர்ந்த புத்தகப் பிரதியொன்று இன்று அனுப்புகிறேன். முலேயாவிலுள்ள சிவநேசர்கள் சிலரை ஓர் இடத்திலே கூட்டி இதை அவர்களுக்கு விளங்கப்படுத்தி அவர்களுடைய துணையோடு ஒரு பெருங்கூட்டத்தைக் கூட்டித் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபையொன்று ஸ்தாபிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன். நாம் சம்பாதிக்கும் பொருளிலே திருக்கேதீச்சரத்துக்குக் கொடுக்கப்படும் பகுதியானது இப்பிறவியிலும் இனிமேல் வரும் பிறவிகளிலும் நீங்காத துணையாக நிற்குமென்பதற்கையமில்லை.

**(மேற்படி விஷயம் 1960ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தில் நடைபெற்ற சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜ ஆண்டுவிழாவில் வெளியிடப்பட்ட மலரிலிருந்து நன்றியுடன் பெறப்பட்டது)**

---

# நினைவஞ்சலி



**தெல்லிப்பழை**

**ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலய பிரதம குரு**

## சிவஸ்ரீ வ.அகிலேஸ்வர குருக்கள்


**40 வருடங்கள் அர்ச்சகராக, உதவிக் குருவாக, பிரதம குருவாக தேவஸ்தானத்தில் அம்பாளின் பணிகளையாற்றிய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துக்காதேவியைப் பிரார்த்திக்கின்றோம்**

**நிர்வாக சபை,**
**சிவபூமி அறக்கட்டளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒல்லாந்தர் கால யாழ்ப்பாணம்

- டாக்டர் க.கணபதிப்பிள்ளை -



இலங்கையில் வியாபார நோக்கமாக வந்திறங்கிய ஒல்லாந்தர் படிப்படியாகக் கொழும்பு முதலிய பாகங்களைக் கைப்பற்றிய பின்னர் கி.பி.1658 ஆம் ஆண்டு பங்குனி மாதம் முதற்பகுதியில் மன்னாரைப் பிடித்தனர். அங்கு ஒரு போர்ப்படையை அமர்த்திவிட்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் நோக்கமாக வன்னியர்கள் நாட்டுக்கூடாகப் பலநாள் வழி நடந்து சென்று கச்சாய்க் கடலைச் சிறுபடகுகள் மூலம் தாண்டிச் சாவகச்சேரியை அடைந்தனர். பின்னர் நாவற்குழியில் ஒரு கோயிலுக்கணித்தாய்ப் போர்த்துக்கேயராற் கட்டப்பட்ட கோட்டையை அணுகினர். இதுகாறும் அவர்கள் வரவை யாவரும் போர்செய்து தடுத்திலர். இவ்விடத்திலேயே அவர்களைப் போர்த்துக்கேயர் முதன்முதல் எதிர்த்தனர். அப்போரிலே பல போர்த்துக்கேயர் மாண்டனர். அடுத்தநாள் பட்டினத்தை நோக்கி நடக்கும்போது அங்கு எதிர்த்த மாற்றார் சேனைகளை எல்லாம் ஒல்லாந்தர் தங்கள் பீரங்கிகளுக்கு இரையாக்கி அவர்களைத் தெருத்தெருவாய்த் துரத்தி யாழ்ப்பாணப் பட்டினத்தின் மேற்பாகத்திற் கட்டப்பட்டிருந்த ஏசுசங்க கோயிலையும் (Jesuit Church) அதனோடு சேர்ந்த பள்ளிக்கூடத்தையும் பிடித்தார்கள். அதன்பின்னர் கிழக்குப் பாகத்தில் இருந்த தொமினிசரினது (Dominicars) கோயிலையும், மடத்தையும் (Monastery) கைப்பற்றினர். இக்காரணத்தால் போர்த்துக்கேயர் தங்கள் வீடுகளிலிருந்து கலைக்கப்பட்டவராய் வேறு புகலிடமின்றித் தடுமாறுற்று யாழ்ப்பாணத்திலுள்ள தங்கள் கோட்டைக்குள் ஒளித்துக்கொண்டனர். ஒல்லாந்தர் இக்கோட்டையை முற்றிக்கை இட்டுக்கொண்டு யாழ்ப்பாணப் பட்டணத்திற்குக் கடல் மூலமாக அடைதற்கு முக்கிய துறைமுகமாகிய ஊர்காவற்றுறையிலுள்ள கோட்டையையும் போய்த் தாக்கி முற்றிக்கையிட்டுப் பிடித்தார்கள். இவ்வெற்றியைக் குறித்து ஒல்லாந்தர் சேனையோடு வந்த பாதிரியாராகிய போல்டேயசு என்பவர் சித்திரை மாதம் 28ஆம் நாள் தாமே கடவுளுக்கு வணக்கஞ்செய்து ஒரு சற்பிரசங்கம் செய்ததாக எழுதுகின்றார். இதற்குப்பின் மூன்று மாதங்களாக யாழ்ப்பாணக் கோட்டை முற்றிக்கை யிடப்பட்டிருந்தது. ஈற்றிலே பசி தாகத்தினால் ஆற்றதவராகிய போர்த்துக்கேயர் ஆனி மாதம் 21ஆம் நாள் கோட்டைக்குள்ளிருந்து வெள்ளைக்கொடியை உயர்த்திக் கோட்டையை ஒல்லாந்தரிடம் ஒப்படைத்தனர். அன்று தொடக்கம் யாழ்ப்பாணம் ஒல்லாந்தர் வசமாயது.

**போர்த்துக்கேயர் சூழ்ச்சி**

அக்காலத்திலே சோழமண்டலக் கரையிலுள்ள நாகபட்டினத்தை ஒல்லாந்தர் கைப்பற்ற முயன்று கொண்டிருந்தமையால் அங்கு பெரியபடை வேண்டியதாயிருந்தது. அதற்காக யாழ்ப்பாணத்தில் வெற்றிசூடிய படையில் பெரும்பகுதியை அனுப்பிவிட்டனர். இக்காரணத்தால் ஒல்லாந்த வீரரிற் சிலரும் ஒல்லாந்தரின் கீழ்ப் போர்ப்படையில் வந்துசேர்ந்த போர்த்துக்கேயர் பலரும் யாழ்ப்பாணத்தைக் காக்கவேண்டி நேர்ந்தது. அத்துடன் கோட்டைக்குள்ளே தொகையான கைதிகளும் இருந்தனர். தங்கள் தோல்வியை நினைந்து மனம் புழுங்கியிருந்த போர்த்துக்கேயர் ஒல்லாந்தரைத் தொலைப்பதற்கு இதுவே ஏற்ற தருணமென நினைத்துச் சடிதியில் அவர்களைக் கொன்று கோட்டையை மறுபடியும் தாம் கைப்பற்ற ஒரு சதியாலோசனை செய்தனர். ஆனால் அவர்கள் எண்ணம் கைகூடுவதன் முன் இச்செய்தி ஒல்லாந்தர் காதுக்கெட்டியது. இதில் சேர்ந்திருந்த போர்த்துக்கேயர் யாவரையும் அவர்கள் கைதிகளாக்கிச் சிலரைத் தூக்கிலிட்டுக்கொன்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலரைக் கால் முதலிய அங்கங்களைச் சில்லிற் கட்டிக் கிழித்தும், நெஞ்சினைக் கோடரியாற் பிளந்து இருதயத்தை எடுத்து அவர்கள் வாயிற் கௌவ வைத்தும் சித்திரவதை செய்தனர். பின்னர் இச்சதியிற் பங்குபற்றிய தலைவர்களின் தலைகளை அறுத்துத் தடிகளிற் குத்தி வெளியே மக்கள் பார்க்கும் வண்ணம் முக்கிய இடங்களில் நாட்டினர். இதிலே ஏசு சங்கத்தைச் சேர்ந்த கல்டேறா (Caldero) என்னும் ஒரு குருவானவரும் தமது தலையை இழந்தனர்.

**இராச்சியப் பிரிவுகள்**

அக்காலத்து யாழ்ப்பாணம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன பில்லேகம்பத்து(வலிகாமம்), வடமராட்சி, தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி. இவைகளெல்லாம் மிகுந்த சனத்தொகையுடையனவாய் இருந்தனவென அக்காலத்து எழுதிய ஒல்லாந்தரின் குறிப்புக் களிலிருந்து தெரியவருகின்றது. ஒல்லாந்தரது கீழைத்தேசத்து நாடுகள் பத்தாவியாவிலுள்ள (Batavia) அரசப் பிரதிநிதியுடைய ஆளுகைக்குக் கீழ்ப்படிந்திருந்தன. இலங்கைத் தேசாதிபதி (Governor) கொழும்பிலேயிருந்தார். அவரின் கீழ் உதவித் தேசாதிபதி ஒருவர் (Lieutenant Governor) யாழ்ப்பாணத்தில் அரசுபுரிந்தார். யாழ்ப்பாண இராச்சியத்தின் கீழ் மன்னார், மாந்தோட்டை, முசலிப்பது, செட்டிகுளம், திருக்கோணமலை, வன்னிப்பற்று முதலியவும் யாழ்ப்பாணத்துக்கு அருகேயுள்ள 13 தீவுகளும் அடங்கியிருந்தன.

வன்னிப்பற்றுக்களை ஒல்லாந்தர் தாமே ஆளவில்லை. இவைகள் வன்னியர் என்ற பெயருள்ள தலைமைக்காரர்களால் ஆளப்பட்டு வந்தன. இவர்கள் ஒல்லாந்தருக்கு வருடந்தோறும் குறிக்கப்பட்ட தொகையான யானைகளைத் திறையாகக் கொடுத்துவந்தார்கள். எனினும் இவ்வன்னியர்கள் ஒல்லாந்தருக்கு முற்றும் அடங்கி நடக்கவில்லை. ஒல்லாந்தரும் இவர்களை இதைப்பற்றி நெருக்க முடியவில்லை. ஏனெனில் இவர்களை ஒல்லாந்தரும் நெருக்கினால் கண்டி அரசனான இராசசிங்கன் பக்கம் சார்ந்து தமக்கு இடுக்கண் விளைப்பார்கள் என்னும் பயத்தினாலேயே.

**சட்டமும் முறையும்**

ஒல்லாந்தார் தங்கள் தேசத்திலிருந்த கட்டளைச் சட்டங்களைச் சிறிது மாற்றி இலங்கையிலும் புகுத்திவிட்டனர். இவர்கள் காலத்திலேயே ஒல்லாந்த தேசாதிபதியாகிய சிமொன்ஸ் (Simons 1703-1707) என்பவர் யாழ்ப்பாணத்துத் தமிழர்களது மணம், விற்பனவு, கொள்வனவு, அடிமை, கடன் முதலியவைகளில் அவர்களிடமிருந்த பழக்கவழக்கங்களை ஒட்டித் தேசவழமை என்னும் பெயருள்ள ஒரு கட்டளைச் சட்டத்தையும் பிறப்பித்தனர். கொழும்பிலும் காலியிலும் ஒவ்வொரு உயர்நீதிமன்றங்கள் இருந்தன. யாழ்ப்பாணத்திலும் காலியிலும் இருந்த நீதிமன்றங்களில் தீர்த்த தீர்வைகள் வழக்காளிகளுக்குத் திருப்தியைக் கொடாதுவிடின் கொழும்புக்கு மனுப்பண்ணிக்கொள்ளலாம். அங்கும் திருப்தியடையாவிடின் பத்தாவியாவிலுள்ள உயர்நீதிமன்றத்திற்கு மனுப்பண்ணிக் கொள்ளலாம்.

**தோம்புகளும் வரிகளும்**

போர்த்துக்கேயர் காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள காணி பூமி, அவற்றிலுள்ள மரங்கள், பயிர்கள் முதலியவும், குடிகளின் தொகையும், அவர்களில் ஆண் பெண் எத்தனை என்றும், மற்றும் ஒவ்வொருவரும் பிறந்த ஆண்டு, நாள், மணமுடித்தநாள் ஆகிய இவையெல்லாம் அரசினரால் பதிவுசெய்து வைக்கப்பட்டிருந்தன. இவைகளைத் "தோம்பு" என்று தமது போர்த்துக்கேய மொழியில் அழைத்தனர். இத்தோம்புகளை ஒல்லாந்தரும் எடுத்தாண்டனர். மூன்று ஆண்டுகளுக்கொருமுறை இவைகளைப் புதுப்பித்தார்கள். இத்தோம்பு மூலமாகவே தலைவரிப்பணம் முதலியவைகளைக் குடிகளிடமிருந்து அறவிட்டனர். யாழ்ப்பாணத் திலுள்ள ஒவ்வொரு சாதியாரும் மொத்தமாக இவ்வளவு பணம் கொடுக்கவேண்டுமென்று கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துத் தலைவரிப்பணத்தை முதன் முதல் வாங்கி வந்தனர். சனத்தொகை பெருத்தபோதும் தலைவரிப் பணத்தொகை பெருக்கவில்லை. ஏனெனில் ஒவ்வொரு சாதியாரிடமிருந்து பணத்தை மொத்தமாக வாங்குகின்ற வழக்கம் இருந்தபடியால், அரசினருக்கு ஒவ்வொரு சாதியாரிலும் தலைவரிப்பணம் இறுக்கின்றவர்கள் எத்தனை ஆட்களென்று தெரிந்துகொள்ள முடியவில்லை. இக்காரணத்தால் தலைவரிப் பணம் சனங்களினின்று வாங்குகின்ற உத்தியோகத்தர் அரசினருக்குத் தாங்கள் வாங்கிய தொகையின் பாகத்தைக் கொடுத்துவிட்டு எஞ்சியதை அவருக்குத் தெரியாது அபகரித்தனர். இது அரசினருக்குப் படிப்படியாகத் தெரியவந்தது. அக்காரணத்தால் சாதிகளிடமிருந்து மொத்தத் தொகையாக வாங்குவதை நிறுத்திவிட்டு, ஒவ்வொரு ஆட்களிடமுமிருந்து தலைவரிப்பணம் வாங்கவேண்டு மென்று கட்டளை பிறப்பித்தார்கள்.

காணி பூமிகளை அளந்து அவை யார் யாருக்குடையன என்று தங்கள் தோம்புகளிற் பதிந்து வைத்திருந்தார்களென்று மேலே கூறப்பட்டது. இவ்வேலை உதவித் தேசாதிபதி புளோம் (Commandeur Blom) என்பவர் காலத்திலே தொடங்கப்பட்டுப் பின்னர், சுவார்டெக்குறூன் (Swaardecroon) என்பவர் காலத்தில் செவ்வனே முடிவடைந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு ஊரையும் தவறவிடாது படங்களில் அமைத்தனர். அப்படங்களும், காணி பூமிகளின் தோம்புகளும் பத்தாவியாவுக்கும் ஒல்லாந்து தேசத்திற்கும் அனுப்பப்பட்டன. இவைகளை எல்லாம் அரசினர் சிரத்தை எடுத்துச் செய்தது ஏனெனில், கொஞ்சமேனும் தவறவிடாது காணிவரி, மரவரி முதலியவை வாங்குவதற்கேயாம். ஏனெனில் யாழ்ப்பாணத்தவர் அக்காலத்தில் காணிவரி கொடுக்காது பெரும்பாலும் தப்பிக்கொள்வது வழக்கமாயிருந்தது. அதுமட்டுமன்றி, முடிக்குரிய நிலங்களையும் தங்கள் நிலமென்று பிடித்துக்கொள்வர். அரசினரால் தெருக்களுக்கென விடப்பட்ட நிலங்களைக்கூடக் கொஞ்சங் கொஞ்சமாய் அருகிலிருக்கும் தங்கள் நிலங்களோடு சேர்த்து வேலியைக் கூட்டி அடைத்துக் கொள்ளுவர். இத்தோம்புகளைப் பதிந்தபின்னர் வரி வாங்குவது மிக இலகுவாயிருந்தது.

வயல் காணியாகியவைகளினது பிரயோசனங் களிலிருந்து பத்திலொன்றை விற்றுப் பணமாய்க் கொடுக்க வேண்டும். இந்த வரியைத் தங்களால் கொடுக்க முடியவில்லை. ஆகையால் அதை நீக்கிவிட வேண்டும் என்று ஊரவர்கள் பலமுறைகளில் விண்ணப்பஞ் செய்தனர். ஆனால் அரசினர் அதை நீக்கிவிடவில்லை. இவ்வரியைக் கொடுக்கத் தவறினால், குறிக்கப்பட்ட பிரயோசனத்தின் பத்திலொரு பாகத்தைப் பலவந்தமாய் எடுத்துக்கொண்டு போய் வரி வாங்குவோர் அரசினரின் பண்டகசாலைகளிற் சேர்ப்பர். யாழ்ப்பாணத்திலுள்ள பனை மரங்களுக்கும் இவ்வரி கொடுக்கப்பட்டு வந்தது. அன்றியும் அரசினருக்குப் பனைமரம் வேண்டியதாயிருந்தால் ஊரிவரிடம் போய்த் தமக்குத் தேவையான மரங்களைச் சொற்ப விலை மாத்திரங்கொடுத்து வாங்குவர். அரசினரின்கீழ் வேலை செய்கின்ற உத்தியோகத்தரும் தங்களுக்குத் தேவையான பனைமரங்களை இவ்வண்ணம் குடிகளிடமிருந்து வருத்தி வாங்குவர். இப்படி வாங்கிய மரங்களை அவைகளின் சொந்தக்காரர் தம்பொறுப்பில் தறித்துச் சலாகையடித்து, அவைகள் சேரவேண்டிய இடத்திற்குக் கொண்டு போய்க்கொடுத்தல் வேண்டும். தென்னைமரங்களுக்கும் அவ்வண்ணமே வரி வாங்கி வந்தார்கள். தோம்புகளைப் புதுப்பித்த பின்னர் ஒல்லாந்தர் இவைகளுக்கு வரியை வாங்காது விடுத்தனர். ஏனெனில் தென்னைகளை வைத்திருப்போர் அரசினருடைய யானைகளுக்கும், யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவந்து விற்பனைக் கிருக்கும் யானைகளுக்கும் தென்னோலைகளை வெட்டி உணவாகக் கொடுக்க வேண்டும். அத்துடன் அரசினருக்கும் முத்துக்குளிப்புக்கும் வேண்டிய எண்ணெயை இவர்கள் தவறாது கொடுத்துவர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒல்லாந்தர் காலத்து மாகாண அதிகாரிகளுக்கு அரசினர் சம்பளம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு ஊரவர்களே தங்களுக்குள் பணத்தைச் சேர்த்துக் கொடுத்து வந்தார்கள். இவ்வழக்கம் தமிழரசர் காலத்திலிருந்து வந்தது. அக்காலத்து ஊரிலுள்ள ஒவ்வொரு குடியும் அதிகாரிகள் வீட்டிற்கு உணவுப் பொருட்களைக் கொடுப்பது வழக்கம். ஆனால் பிற்காலத்தில் தலைக்கு ஒரு பணவீதம் போட்டு அவர்களுக்குக் கொடுத்து வந்தார்கள். இவ்வழக்கத்தைப் போர்த்துக்கேயர் பின்பற்றினார்கள். எனினும் ஒல்லாந்தர் காலத்து ஊரிலுள்ள யாவரும் இப்பணத்தைக் கொடுக்கவில்லை. வேளாளர், சாண்டார், தனக்காரர் (Tannatares) ஆகிய சாதியாரே கொடுத்து வந்தனர். தங்கள் அரசாட்சி தொடங்கிய காலத்தின் பின் மாகாண அதிகாரப் பதவியை மாந்தோட்டை, பூநகரியாகிய இவ்விரண்டிடங்களைத் தவிர மற்றெங்கணும் நீக்கி விட்டனர். எனினும் ஈங்கு கூறப்பட்ட அதிகாரவரியை மேலே சொல்லிய சாதியினர் மறாது கொடுத்துவந்தமையால், அரசினர் அதை நீக்காது வாங்கிக்கொண்டே வந்தனர். இச்சாதிகளிலுள்ளார் இவ்வரியைக் கொடுப்பதற்குச் சற்றேனும் பின்வாங்கவில்லை. இதைக்குறித்துச் சுவாடெக்குறூனென்பவர் கூறுவது கவனிக்கத்தக்கது. “இச்சாதிகளிலுள்ளார் அரச அதிகாரிகளைத் தாபரிக்கும் கடமை தங்களிலிருப்பது தங்களுக்கு மற்றைய சாதியர்களினும் பார்க்க மிகுந்த மேன்மையை அளிக்கின்றது என மகிழ்வெய்துவர். மேலும், இங்கே காட்டிய மூன்று சாதியாளருக்கும் தாம் நிகரென நினைத்திருக்கின்ற மடைப்பள்ளியார், அகம்படியார், பரதேசிகள் முதலிய சாதியினரும் இவ்வண்ணமாகவே இவ்வரியைப்பற்றி எண்ணுவர். ஆகையால் அரச அதிகாரிகளைப் பொருள்கொடுத்துத் தாங்குதல் தங்கள் தங்களுக்குக் கௌரவமென்று ஒவ்வொரு சாதியினரும் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டிருத்தலை அரசினர் தங்களுக்குச் சார்பாக அமைத்துக் கொண்டு இந்தவரியைப் பணமுள்ள எல்லா மேல்சாதிகளிடத்தும் வாங்கத் தெண்டிக்க வேண்டும்.”

ஒல்லாந்த அரசினர் தலைவரிப்பணம், நிலவரி, பத்திலொருவரி ஆகிய இவைகளைச் சனங்களிடமிருந்து அறவிடுவதற்கு ஊரவருக்குள்ளேயே, உத்தியோகத்தராகிய கணக்கப்பிள்ளை, ஆராய்ச்சி முதலியவர்களை நியமித்திருந்தனர். இவ்வுத்தியோகத்தர் மூன்று மாதத்திற்கொருமுறை அவரவர்களுக்கு அறவிடும்படியாகவிட்ட மொத்தத்தொகையின் காற்பங்கைக் கோட்டையிற் சென்று அரசினருக்கு ஒப்படைத்து விடவேண்டும். இவ்வுத்தியோகத்தர் வேளாள வகுப்பிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டனர். ஆனால் 1690 ஆம் ஆண்டு அரசினர் இதிற் சில மாற்றங்கள் செய்துவிட்டனர். இவர்கள் பெரும்பாலும் குடிகளை வருத்தியும் அவர்கள் துன்பங்களை மேலதிகாரிகளுக்கு மனுச்செய்யவிடாது தடுத்தும் துன்புறுத்தி வந்தனர். இவைகளையறிந்த அரசினர் இவ்வுத்தியோகத்தரை மூன்று ஆண்டுகளுக்குகொருமுறை இடத்துக்கிடம் மாற்றி வந்தனர். அன்றியும் மடைப்பள்ளியார் முதலிய ஏனைய வகுப்புக்களிலிருந்தும் இவ்வுத்தியோகத்துக்கு ஆட்களை நியமித்தனர். இது வேளாளருக்கு மிகவும் கோபத்தை மூட்டியது. அரசினருக்கு மாறான சில சச்சரவும் எழுந்தது.

**ஊழியம்**

மேலும் காணி பூமிகளுள்ள ஒவ்வொருவரும் அரசாங்கத்துக்காக ஒவ்வொரு தெரு, கோட்டை, பாலம் முதலியன கட்டுதல் திருத்துதல் ஆகிய கடமைகளைக் கூலி பெறாமற் செய்து கொடுத்தல் வேண்டும். இதை 'ஊழியவேலை' எனக் கூறுவர். இவ்வேலை ஆண்டில் 12 நாட்களுக்கு ஒவ்வொருவரும் செய்யவேண்டியது. அப்படிச் செய்யத் தவறுவோர் குற்றப்பணம் இறுக்க வேண்டும். இந்த ஊழியவேலையைப்பற்றி சுவார்டெக்குறூனென்பவர் பின்வருமாறு கூறுகின்றார். “யாழ்ப்பாணக் கோட்டை வேண்டிய திருத்தங்கள் செய்யப்பெறாது பாழான நிலையில் இருக்கின்றது. அரசினருக்காக மரக்கலங்களில் ஏற்றுமதி இறக்குமதி செவ்வனே நடக்கின்றதில்லை. அரசினர் வெடி மருந்துச்சாலைகளில் வேலைகள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன. பருத்தித்துறையில் அரசினருக்குள்ள செங்கல்லுச் சூளைகளில் வேலை முறைப்படி நடக்கின்றதில்லை. சுண்ணாம்புக் காளவாய்களில் வேலை தாமதிக்கப்பட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னிப் பற்றுக்கருகிலுள்ள காடுகளில் அரசினருக்கு மரந்தறிப்பதற்குப் போதிய தொழிலாளரில்லை. கொல்லனுலைக்கு வேண்டிய கரியைச் சுட்டுக்கொடுப்பதற்குப் போதிய ஆட்களில்லை. குற்றப்பணத்தையிறுத்து யாழ்ப்பாணத்தவர் ஊழிய வேலையினின்றும் தம்மைத் தப்புவித்துக் கொள்வதால் இத்தகைய நட்டம் அரசினருக்கு வருகின்றது. ஆகையால் குற்றப் பணத்தை இரட்டித்துவிட்டால் இவர்கள் குற்றமிறுக்கச் சம்மதிக்காது ஊழியவேலை செய்ய உடன்படுவார்கள். அதனால் மேலே கூறிய வேலைத் தாமதங்களும் நட்டங்களும் அரசினருக்கேற்படா. மேலும் ஊழியஞ் செய்யத் தகுதியற்றவர்களாகிய நோயாளிகளும் வயோதிபரும் பனம் பாயிழைத்தும் கொல்லனுலைக்கு வேண்டிய கரிசுடுவதற்காகப் பனம் ஊமலைப் பொறுக்கிச் சேகரித்தும் அரசினருக்கு கொடுத்தல் வேண்டும் எனக்கட்டளை பிறப்பிக்க வேண்டும். சிறிய பொருள்களாக விருந்தபோதிலும் இவைகள் அரசினரின் பண்டகசாலைகளுக்கும் மரக்கலங்களுக்கும் மிக உதவும். அன்றியும் முத்துக்குளிக்கும் காலங்களில் பாய்களை வாங்குவதற்கு அரசினர் பணஞ் செலவழிக்கத் தேவையில்லை".

**அரசினர் வியாபாரம்**

வர்த்தகச் சங்கமாகையினாலே ஒல்லாந்தர் வியாபாரத்திலே முக்கிய கண்ணுங் கருத்துமாயிருந்தனர். காலி, மாத்தறை முதலிய விடங்களிலிருந்து யானைகளை மரக்கலங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து, அங்கு வங்காளம் தஞ்சாவூர் முதலிய இடங்களிலிருந்து வந்த யானை வியாபாரிகளுக்கு விற்பர். அதுமட்டுமன்றி மாந்தோட்டை, வன்னி, பூநகரி முதலிய இடங்களிலுள்ள காடுகளில் தாமே ஆட்களை வைத்து யானைகளைப் பிடிப்பர். வன்னியையாண்ட வன்னியர்களும் யானைகளைத் திறையாகக் கொண்டுவந்து கொடுப்பர். இவைகளையெல்லாம் தரகர் மூலமாய் இந்திய வியாபாரிகளுக்கு விற்றுப் பெரும்பண மீட்டினார்கள். யானை வியாபாரத்திற்கு யாழ்ப்பாணமே ஒல்லாந்தருக்கு முக்கிய இடமாகவிருந்தது.

யாழ்ப்பாணத்திலே ஒல்லாந்தரின் கீழ் நெசவுத்தொழிலும் நடத்தப்பட்டுவந்தது. இதற்காக இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து சேணியரையழைத்து வந்து குடியேற்றினர். அவர்களுக்கு நெசவுக்கு வேண்டிய பஞ்சு நூல் முதலியவற்றையும் கொடுத்துப் பணமுங் கொடுப்பர். சேலைகளை அவர்கள் நெசவு செய்து அரசினரிடம் ஒப்புவித்து விடவேண்டும். இச்சேலைகளைப் பெரும்பாலும் சேனையிலுள்ள போர் வீரருக்குக் கொடுப்பார்கள். இங்கே நெசவுசெய்யப்பட்ட சேலைகள் அவ்வளவு உயர்தரமானவையல்ல. அக்காரணத்தால் புற நாடுகளிலிருந்து சேலைகள் வருவதுண்டு.

யாழ்ப்பாண இராச்சியத்திலே காணப்பட்ட சாய வேர் சோலைகளுக்குச் சாயங்காய்ச்சு கிறதற்கு மிக முதன்மையானதென்று ஒல்லாந்தர் கருதினர். இச்சாயவேரினால் அரசினருக்கு மிகுந்த ஊதியம் வந்தது. காரைதீவிற் காணப்பட்ட சாயவேரே யாவற்றிலும் மிகத் திறமை வாய்ந்தது. ஆனால் இது மன்னாரில் தான் பெருந்தொகையாகக் காணப்பட்டது. வன்னியிலும் ஏனைய தீவுகளிலும் உண்டாகும் சாயவேர் மேலே கூறப்பட்ட இடங்களிலுண்டாகும் சாயவேரோடு சேர்த்துக் காய்ச்சினாலன்றிச் சேலைகளுக்கு நல்ல சாயம் கொடுக்கமாட்டாது. யாவா (Java) தேசத்தில் உண்டாகும் சாயவேர்ப் பூண்டையும் சில காலங்களில் யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து உண்டுபண்ண முயன்றனர். ஆனால் அது பயன்படவில்லை. அரசினர் சாயவேரைக் கிண்டுவித்துப் பெருந்தொகையாச் சேகரித்து யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, பருத்தித்துறை முதலிய இடங்களில் வசித்த சாயக்காரரிடம் கொடுத்து தங்கள் சேலைகளுக்குச் சாயங்காய்ச்சுவிப்பர். இவ்வண்ணம் காய்ச்சிய சேலைகளை யாழ்ப்பாண நாட்டில் மட்டுமன்றி பத்தாவியாவுக்கும் கொண்டுபோய் விற்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஊரவர் வியாபாரம்**

யாழ்ப்பாணத்திற்கு மிகுதியாய்த் தேவையான பொருள் அரிசியும் நெல்லுமாகும். யாழ்ப்பாணத்திற் சில பாகங்களிலும் தீவுப்பகுதி, வன்னி, பூநகரி, மாந்தோட்டை ஆகிய இடங்களிலும் நெல் விளைவிக்கப்பட்ட போதிலும், இதனால் வரும் நெல் ஊரவர்களுக்கு உணவுக்குப் போதாமையாலே பிறநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது. மகமதியர் வங்காளத்திலிருந்து கொண்டுவந்து வியாபாரஞ் செய்வர். மற்றும் ஊரவர்கள் தஞ்சை, ஒறிசா, தொண்டி, திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களிற் போய்வாங்கி மரக்கலங்களில் ஏற்றிக்கொண்டு வந்து விலைக்குக் கொடுப்பர். இக்கலங்கள் பெரும்பாலும் பருத்தித்துறை, வல்வெட்டி (Wellewitte), தொண்டைமானாறு (Telemanaar) ஆகிய துறைகளில் இவைகளை இறக்குமதி செய்யும். ஆனால் அங்கு வியாபாரிகள் இவ்வண்ணம் வரும் நெல்லை வாங்கிச் சேகரித்து வைத்துத் தாம் நினைத்த வண்ணம் விலையேற்றி விற்கும் வழக்கம் இருந்ததால் வறிய சனங்களுக்கு பெருங்கஷ்டம் ஏற்பட்டது. அதைக் கண்ணுற்ற ஒல்லாந்த அரசினர் இம்மரக்கலங்கள் யாவையும் ஊர்காவற்றுறையிலேயே இறக்குமதி செய்ய வேண்டுமென்றும் அவைகளில் வரும் நெல்லை ஓரிடத்தில் குவித்துவைத்து யாவருக்கும் ஒரே விலைக்கு விற்க வேண்டுமென்றும் கட்டளை செய்தார்கள்.

யாழ்ப்பாணத்தவர் வேறு பொருள்களிலும் வியாபாரஞ் செய்துவந்தனர். அக்காலத்தில் பனைமரம் மிகுந்த பிரயோசனமுடைதாயிருந்தது. பனங்காய், பனாட்டு, ஒடியல், கிழங்கு, பனங்கட்டி ஆகிய இவைகளும் அவருக்கு மிகவும் பயன்பட்டன. இப்பண்டங்களை அவர்கள் சோழ மண்டலக்கரையிலுள்ள ஊர்களுக்கும் தொண்டிக்கும் கொண்டுபோய் விற்பர். திருக்கோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்கும் அனுப்புவார்கள். இவை மட்டுமன்றி, கதம்பைகயிறு, தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய் முதலியவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வார்கள்.

அத்துடன் அக்காலத்திலும் புகையிலை மிகச்செழித்து வளர்ந்ததினால் இதை இந்தியாவிற்குக் கொண்டுபோய் விற்று பெரிய இலாபமடைந்தனர். இப்பொருள்களுக்கு அரசினர் சுங்கவரி வாங்காது விடுத்தனர்.

அக்காலத்திலே இந்தியாவிலிருந்து அடிமைகளாக மக்களை விலைக்கு வாங்கி யாழ்ப்பாணத்திற்குக் கொண்டுவந்து விற்கும் வழக்கமிருந்தது. 1696ஆம் ஆண்டு 3589 அடிமைகள் கொண்டு வரப்பட்டார்கள். இவர்களைக் கொண்டுவந்து யாழ்ப்பாணத்தில் இறக்கும்போது ஒவ்வொருவருக்கும் 11 பணவீதம் அரசினருக்குச் சுங்கவரி கொடுக்க வேண்டும். இதனால் அரசினருக்குப் பெருத்த வருமானம் வந்து கொண்டிருந்தது. நெல் வியாபாரத்திலும் அடிமை வியாபாரம் மிகுந்த இலாபத்தைக் கொடுத்தபடியால் வியாபாரிகள் அடிமை வியாபாரத்திலேயே மிகுந்த கண்ணுங் கருத்துமாகவிருந்தனர். சோழமண்டலக் கரையில் நெல் விளையாது பஞ்சம் வரும் காலங்களில் இவ்வியாபாரிகள் அங்கு சென்று இவர்களைப் பெருந்தொகையாக வாங்கிவருவர். ஏனெனில் அக்காலங்களில் மக்கள் உணவுக்கு மிக வருந்துவதனால் ஒரு சிறங்கை அரிசியைக் கொடுத்தும் அடிமைகளாக வாங்கிக் கொள்ளலாம். இப்படிக் கொண்டுவரப்பட்ட அடிமைகள் மூலம் யாழ்ப்பாணத்திலுள்ளார் தங்கள் வயல் வேலைகளைச் செய்வர் சில காலங்களில் இவர்கள் வயல்களில் வேலை செய்து கொண்டிருக்கும்போது வன்னியர்கள் பிடித்துக் கொண்டுபோய்த் தங்களுக்கு அடிமைகளாக வைத்திருப்பதுமுண்டு. சிலவேளைகளில் கண்டியரசனிடங் கொண்டு போய் விலையாக அல்லது உபகாரமாகக் கொடுப்பதுமுண்டு. சில காலங்களில் இவ்வடிமைகளை அரசினரும் வாங்கித் தமது வயல் நிலங்களில் வேலைக்கு அமர்த்துவர்கள். இவர்களை அரசினரின் அடிமைகள் என்று குறிப்பதற்காகக் குறி சுட்டுவிடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சாதி ஒழுக்கம்**

இவர்களுடைய காலத்தில் ஒவ்வொரு சாதியாரும் தங்கள் தங்களுடைய நடையுடை பாவனைகளோடு இருக்க வேண்டுமென்று ஏற்பாடு இருந்தது. எனினும் தாழ்ந்த சாதியாரெனக் கருதப்பட்டோர் இக்கட்டளையைச் சரி வரக் கவனித்து நடக்கவில்லை. இதைப்பற்றிச் சுவார்டெக்குறூன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "தாழ்ந்த சாதியார் தங்கள் உடைகளைத் தமது சாதிக்கேற்றவாறு அணிகின்றாரில்லையெனக் கேள்விப்படுகின்றேன். மேலும், அவர்கள் தலைமயிரைச் சாதிக்கேற்ற முறைப்படி வெட்டாது வளர்ப்பதாலும், கடுக்கண் முதலிய அணிகலன்களைத் தங்கள் காதுகளில் அணியாததாலும் அவர்களை உயர்ந்த சாதி மக்களிலிருந்து பிரித்தெடுத்துக்கொள்ள முடியவில்லை. அவர்கள் இவ்வண்ணம் நடந்து கொள்வதனால் மேல்சாதியாருக்குக் கோபத்தை மூட்டுகின்றனர். யாழ்ப்பாணத்திலுள்ள உதவித் தேசாதிபதிக்கு இத்தகைய தவறுகளைத் தண்டிக்க மேலதிகாரிகள் உத்தரவு கொடுத்தல் வேண்டும். வேண்டிய நேரங்களில் தண்டித்தாலன்றி அவர்களை அடக்கி வைத்திருக்க முடியாது. ஏனெனில் இவ் யாழ்ப்பாணத்திலுள்ளார் செருக்கும் மமதையும் பிடித்த பெரிய முரடர். இடங்கொடுத்தால் தங்களுக்கு மேலிருக்கின்ற உத்தியோகத்தருக்கு மாறாய் அவர்களின் மேல் பொய்யான குறைகளைச் சுமத்தி, மேலதிகாரிகளுக்கு மனுப்பண்ணச் சற்றேனும் பின்வாங்கமாட்டார். ஆனால் அவர்களுக்குக் கொஞ்சமேனும் இடங்கொடாது முறையாய் நடந்தால் உத்தியோகத்தருக்குப் பல்லினைக்காட்டி அடிமைகள் போல் காலடியில் வீழ்ந்து கிடப்பர். இதற்குக் காரணமென்னவானால் தங்களது அரசர் காலத்திலும் போர்த்துக்கேயர் காலத்திலும் ஆளுகின்ற மேலதிகாரிகளுக்கே கீழ்ப்படிந்து நடந்த பழக்கமுடையவர். கீழுத்தியோகத்தருக்கு கீழ்ப்படிந்து நடக்கும் பழக்கம் அவர்களுக் கில்லை. கீழுத்தியோகத்தர் ஏதும் முறைகேடாய் நடந்தால் மேலதிகாரிகளுக்கு மனுப் பண்ணலாமென்ற கட்டளைச் சட்டம் அரசாங்கத்திலிருப்பதால் அவர்கள் பொய்க்குற்றங்களை இவர்கள் மேலேற்றி முறைப்பாடு செய்வதில் கொஞ்சமேனும் பின்வாங்குகின்றாரில்லை. அவர்கள் செய்யுங் குற்றங்களுக்குத் தண்டனை செய்யும் தத்துவத்தைக் கீழுத்தியோகத்தருக்கு அரசினர் கொடுக்க வேண்டும். இப்படியான தத்துவம் இவர்களுக்கில்லாவிடில் எங்களுத்தியோகத்தரை அவர்கள் சற்றேனும் மதியாதநிலைமை வந்துவிடும். அவ்வண்ணமவரின் எங்கள் உத்தியோகத்தர் அவர்களுக்குச் சிரிப்புக்கிடமாகி விடுவர்".

**சமயமும் கல்வியும்**

யாழ்ப்பாணக் கோட்டை பிடிபட்டதும் ஒல்லாந்தர் தங்களது சமயமாகிய பாதிரிவேதத்தை யாழ்ப்பாணத்தவருக்குள் பரப்பத் தொடங்கினர். போர்த்துக்கேயருடைய பழைய கத்தோலிக்க கோயில்களையெல்லாம் பாதிரி வேதக் கோயில்களாக மாற்றி விட்டனர். தெல்லிப்பழை, மல்லாகம், மயிலிட்டி, அச்சுவேலி, உடுவில், வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சங்கானை, நல்லூர், சுண்டிக்குழி, கோப்பாய், புத்தூர், நாவற்குழி, சாவகச்சேரி, கச்சாய், வரணி, எழுதுமட்டுவாள் (Illondimatual), கட்டைவேலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, முகமாலை, பூலைப்பழை (பழை), தம்பம்மை (Tambamme) ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய இடங்களில் ஒவ்வொரு கோயிலிருந்தது. இவற்றிற்கருகே, பள்ளிக்கூடங்களும் வைத்துப் பிள்ளைகளைப் படிப்பித்தனர்.

இங்கு கூறப்பட்ட கோயில்கள் ஒவ்வொன்றிற்குப் பக்கத்தில் பெரும்பாலும் கூத்துக் கொட்டகைகள் கட்டப்பட்டிருந்தன. அவைகளில் போர்த்துக்கேயர் காலத்துக் கத்தோலிக்கர் பெருநாட் காலங்களில் ஏசுவின் சீவிய சரித்திரத்தை பாவைக்கூத்து மூலம் சனங்களுக்கு காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயபோதனை செய்து வந்தார்கள். இந்துக் கோயில்களில் முதன் முதல் பாதிரிவேதத்தைக் குறித்துச் சற்பிரசங்கம் செய்தவர் ஒல்லாந்த சேனையோடுவந்த போல் டேயசு என்னும் பாதிரியாராகும். 1663ஆம் ஆண்டு காணப்பட்ட கோயிற்பட்டோலையின்படி யாழ்ப்பாணத்தில் ஆணும் பெண்ணுமாக 62558 கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். அடிமைகளில் 2587 கிறிஸ்தவர் இருந்தனர். 1658 ஆம் ஆண்டு தொடக்கம் 1661 ஆம் ஆண்டு வரை அதாவது 3 ½ வருடத்திற்குள், ஞானஸ்நானம் பெற்றபிள்ளைகளின் தொகை 5799. விருவறிந்த 36 பிள்ளைகளும் ஞானஸ்நானம் பெற்றனர். இந்த 3½ வருடத்திற்குள் 2158 விவாகங்கள் வேதமுறைப்படி நடந்தன. இக்கோயில்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் 10 மணிக்குச் சனங்கள் திரள் திரளாய்ப் போய்ச்சேருவர். முதலாக அவர்கள் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து ஒரு வேத கீதத்தைப்பாடுவர். கோயில்களில் பாதிரியார் இல்லாத நேரத்தில் கோயிலோடு சேர்ந்துள்ள பள்ளிக்கூடத்துச் சட்டம்பியார் தமிழ்மொழியில் எழுதிய ஒரு பிரசங்கத்தை வாசிப்பார். ஒவ்வொரு கோயிலுக்கும் சிலதொகையான பிரசங்கங்கள் பாதிரியாரால் ஏற்கனவே எழுதிக் கொக்கப்படும். இது முடிந்தவுடன் எல்லோரும் ஒரு வேத கீதத்தைப்பாடி வணக்கத்தை முடிப்பர். தமிழ்மொழியில் பிரசங்கஞ்செய்தல் ஒல்லாந்த பாதிரிமாருக்கு மிகத் தொந்தரவாயிருந்தது. ஆனால் கிறிஸ்து சமயத்தின் பிரதான விடயங்களை வினாவிடை மூலம் அவர்கள் படித்துப் பின்னர் சனங்களுக்குப் படிப்பிக்கக் கூடியதாகவிருந்தது. உரோமன் கத்தோலிக்கருக்கு இந்தக் கஷ்டமில்லை. அவர்கள் பிரசங்கம் அவ்வளவு மிகுதியாய்ச் செய்வதில்லை. அத்துடன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வரும்பொழுதே போர்த்துக்கேய மொழியில் பிரசங்கஞ் செய்தார்கள். இக்காரணங்களினாலே ஊரவர் போர்த்துக்கேய குருமாரை உயர்த்தியும் போர்த்துக்கேய மொழியில் பிரசங்கச் செய்ய இயலாத ஒல்லாந்தப் பாதிரிமாரைத் தாழ்த்தியும் பேசிக்கொள்வார். போல் டேயசுப் பாதிரியார் போர்த்துக்கேய மொழியிலிருந்து சமயத்திலிருந்து வேண்டிய பல நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பித்தனர். அவைகளுட் சிலவற்றைக் கூறுவோம்: மத்தேயு எழுதிய சுவிசேஷம், புதிய ஏற்பாட்டு வினாவிடை, பழைய ஏற்பாடு வினாவிடை, ஞானஸ்நான வாய்ப்பாடு, காலை மாலை வணக்கம், கைப்பிடிப்பில் கூறும் வாய்ப்பாடு, தாவீதின் கீதங்கள், லூக்கா சுவிசேஷசத்தின் பாகம் என்பன. இதிலிருந்து போர்த்துக்கேயர் காலத்தில் கோயில்களில் போர்த்துக்கேய மொழியே பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றதென்பதையும் ஒல்லாந்தர் வரவின் பின்னரே அங்கு தமிழ்மொழி பாவிக்கப்படத் தொடங்கியதென்றும் தெரிகின்றது.

இவ்வளவு சிரத்தை எடுத்து ஒல்லாந்தர் தங்கள் சமயத்தைப் பரப்ப முயன்றபோதும் யாழ்ப்பாணத்தவர்கள் அதை முழுமனதோடும் ஏற்றுக்கொள்ளவில்லைப் போல் தோன்றுகின்றது. இதைப்பற்றிச் சுவார்டெக்றூன் பின்வருமாறு கூறுகின்றார். "இந்த இலங்கையை எடுத்த நாள் தொடக்கம் நாங்கள் மிகுந்த பணத்தைச் செலவிட்டு உண்மையான எங்களது சமயத்தை இந்தச் சொற்கேளாத முரட்டுச் சாதியாருக்குள் (Perversenation) பரப்ப முயல்கின்றோம். இதற்காக கழிந்த 38 வருடங்களாக 35 கோயில்களையும் 4 பாதிரிமாரையும் வைத்திருக்கின்றோம். ஆனால் இந்த நன்றிகளையெல்லாம் யாழ்ப்பாணத்தவர் எவ்விதம் அங்கீகரிக்கின்றார்கள் என்று யான் சொல்லத் துணியேன். எனக்குப் பின் வருபவர்கள் இதைப்பற்றி அறிந்து கூறட்டும். ஆனால் ஒன்று மாத்திரம் இங்கே கூறுவேன். 1693 ஆம் ஆண்டிலே யாழ்ப்பாணத்திலுள்ள கோயில்களிலெல்லாம் அஞ்ஞானிகளின் புத்தகங்கள் (Heathen Books) அடுக்கடுக்காக வேதப்புத்தகங்களோடு வைத்திருக்கக் கண்டுபிடித்தோம். 1689ஆம் ஆண்டு தேசாதிபதி மிட்றிச்செற்று (Mydregt) என்பவர் கத்தோலிக்க கோயில்களையும் அவர்கள் இரகசியமாக வைத்திருந்த கன்னியாஸ்திரி மடங்களையும் அடியோடு குலைத்து எங்கள் மெய்ச்சமயத்தைப் பரப்புவதற்காக ஒரு ஞானக்கழகத்தைப் (Seminary) பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டுக் கட்டுவித்தனர். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கூட இத்தகைய ஏமாற்றங்கள் நடந்து வருகின்றன. நான் கொழும்புக்குப் போனபோது பின்வருஞ் செய்தியைக் கேள்விப்பட்டேன். ஒரு அரச சேவகன் வரணியிலுள்ள கோயிலைச் சார்ந்த சட்டம்பிமார்களின் அனுமதியோடு கெட்ட புராணங்களைப் படிப்பித்தானாம். அதனை அதுமதித்ததற்காகக் கோட்டார் அச்சட்டம்பிமாரைப் பிடித்து பிரம்படியும் கொடுத்து அவர்களிடத்திருந்த அஞ்ஞான புத்தகங்களையும் சுட்டெரித்தனர். ஆனால் நான் கொழும்பிலிருந்து திரும்பிவந்த பொழுது இந்த சட்டம்பிமார் வேலையினின்றும் நீக்கப்படாமையைக் கண்ணுற்று ஆச்சரியமடைந்தேன். இனி அந்தச் சேவகனையும் பிடிக்கவில்லை. வரணியில் இப்படிப்பட்ட விஷயங்கள் புதியனவல்ல. விக்கிரகவணக்கம் (Idolatory) ஒழுங்காக நடந்து வருகின்றது. இங்குள்ளார் வன்னியர்களுடன் தொடர்புடையவர்களாதலாற்றான் இவ்விதம் நடக்கின்றனர். பேய் பிசாசுகளை வணங்குவதில் வன்னியர்கள் முதற்றரமானவர்கள். இன்னும் அவர்கள் தங்கள் வீட்டுக்குள் ஒரு ஐரோப்பியனையும் அடுத்தறியார். ஏனெனில் வீட்டுக்குள் வந்தால் அவர்கள் தங்கள் விக்கிரக வணக்கத்தைக் கண்டுவிடுவார்கள் என்ற பயத்தினாலேயே. ஆனால் வெளியில் வேதக்காரரெனக் காட்டுவதற்காக ஞானஸ்நானமும் பெறுகின்றார்கள். பாதிரிமாரைக் கொண்டு கைபிடிப்பும் செய்கின்றார்கள். மிட்றிச்செற்று என்னும் தேசாதிபதி ஞானக்கழகத்தைத் தொடங்கியபோது தொன் பிலிப்பு நல்லமாப்பாணன் என்னும் வன்னியன் அவரை மகிழ்விக்கும் நோக்கமாகத் தன்னுடைய மக்களுள் ஒருவனை அக்கழகத்தில் மாணவனாகச் சேர்ப்பித்தான். ஆனால் இத்தேசாதிபதி போனவுடன் சில பொய்ச்சாட்டுக்கள் சொல்லி அவனை வீட்டுக்குத் திருப்பியழைத்து விட்டான். பின்னர் நாகபட்டினத்துக்கு இச்சிறுவன் போயிருந்தபோது, சைவக்கோயிலொன்றில் அருச்சனை செய்யும்பொழுது கண்டுபிடிக்கப்பட்டான். ஞானக்கழகத்திலே மெய்ச்சமயத்தைப் படித்துவந்த இப்பத்து வயதுச் சிறுவன் இப்படிச் செய்தபடியால் அவன் அதைத் தாய் தகப்பன் ஏவலிற் செய்திருக்க வேண்டும். அன்றேல் அவர்கள் வழக்கமாக இப்படிச் செய்ததைப் பார்த்துத் தானும் பின்பற்றிச் செய்திருக்கவேண்டும். இப்படிப்பட்ட சமயத்தைப்பற்றிய பல குறும்புகளை இந்த யாழ்ப்பாணத்தார் செய்து வருகின்றனர். எங்களுடைய உண்மையான மதத்தை இவர்கள் ஆவலோடு ஏற்றுக்கொள்ளுகின்றார்களில்லை. எல்லா மக்களுடைய இருதயத்தையும் நுணுகியாராய்கின்ற வல்லமையுடைய கர்த்தருக்குத்தான் இது தெரியும். இவர்களுடைய மனம் திரும்புதற்குப் பக்குவகாலம் வரவில்லையோ என்னவோ எனக்குத் தெரியாது. சர்வ வல்லவராகிய கர்த்தரே இதைப் பார்த்துக்கொள்ளட்டும்

(நன்றி:- ஈழகேசரி -ஆண்டு மடல் (1939)

## கோண்டாவில் கிழக்கு சிவ மஹாகாளி அம்பாள் தேர் திருவிழா





*கோண்டாவில் பொற்பதி வீதி ஸ்ரீ சிவ மஹாகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் இரதோற்சவம் கடந்த 28.02.2018 புதன்கிழமை நடைபெற்றபோது அம்பாள் சித்திரத்தேரில் ஆரோகணித்து வீதி வலம் வரும் காட்சி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்து மக்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்த கந்தையா நீலகண்டன் அவர்கள்

- த.மனோகரன் -

ஆற்றலும், ஆளுமையும் கொண்ட ஒரு பெருமனிதன் இவ்வுலக வாழ்வை நிறைவுசெய்து கொண்டு இறைவன் திருவடியில் அமைதியடைந்து விட்டார். ஆம்! பல்துறை ஆற்றலும், ஆளுமையும் கொண்ட அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. நீலகண்டன் தனது எழுபத்தோராவது அகவையில் கடந்த மாதம்18ஆம் திகதி அமரத்துவமடைந்து விட்டார். பிறப்புண்டு, வாழ்வுண்டு. இறப்பும் உண்டு என்ற இயற்கைநியதிக்கொப்ப 1947ஆம் ஆண்டு நான்காம் மாதம் பதினாறாம் திகதியன்று வடஇலங்கையிலுள்ள வடமராட்சியின் உடுப்பிட்டியில் கந்தையா தம்பதியினரின் மகனாகப் பிறந்து அன்னார் தனது ஆரம்பக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் பாடசாலையிலும் உயர்கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று இலங்கை சட்டக்கல்லூரியில் பயின்று 1969 இல் சட்டத்தரணியாக வெளியேறினார். பாடசாலைக் காலத்திலேயே தனது எழுத்தாற்றலை வெளிப்படுத்திய அன்னார், கொழும்பில் தனது தொழிலை மேற்கொண்ட காலம் முதல் இறக்கும் நாள் வரை சமயப்பணி, கல்விப்பணி, சமூகப்பணியென்று பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆம் !இறப்பை எதிர்கொள்வதற்கு சில மணி நேரத்திற்கு முன்பும் சமய நிகழ்வொன்றின் ஒழுங்குகளை நேரில் மேற்பார்வை செய்தமை அவரின் செயலுறுதியை வெளிப்படுத்துகின்றது.

ஆரம்பத்தில் அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கப் பேராளராக, அகில இலங்கை இந்து மாமன்றத்தில் இடம்பெற்ற அவர், மாமன்றத்தின் துணைச் செயலாளராகவும், பொதுச் செயலாளராகவும் தலைவராகவும் பல்லாண்டுகள் திறமையுடன் பணியாற்றினார். கொழும்பு விவேகானந்த சபை, திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச்சபை உட்பட பல இந்து சமய நிறுவனங்களில் பல பொறுப்புக்களை வகித்துள்ளார். கோழும்பு தமிழ்ச் சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டார்.

அமரர் வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளையுடன் இணைந்து மூடிக் கிடந்த கொழும்பு இரத்மலானை இந்துக் கல்லூரியை மீண்டும் இயங்க செய்றபட்டவர்களில் திரு.கந்தையா நீலகண்டனும் முக்கிய இடம் பெறுகின்றார். அத்துடன் இரத்மலானை இந்துக் கல்லூரியின் மாணவ மாணவியரின் எண்ணிக்கைப் பெருக்கத்தையும், வசதியற்ற பிள்ளைகளின் நலனையும் நோக்காகக் கொண்டு இலவச தங்குமிடம் மற்றும் உணவு உட்பட்ட வசதிகளுடன் கூடிய மாணவ விடுதிகளை நிறுவவும் உழைத்தார். பல ஆண்டுகளாகப் பலநூறு தமிழ்ப் பிள்ளைகள் குறித்த விடுதியான சக்தி இல்லத்தில் தங்கி பயின்று பயன் பெற்றுள்ளனர்.

காணிகிடைத்தும் பல்லாண்டு காலமாக கட்டடம் அமைப்பதில் பின்னடைவு கண்டிருந்த அகில இலங்கை இந்து மாமன்றத் தலைமைப் பணிமனையை அதன் முன்னாள் தலைவர்களான அமரர் க. பாலசுப்பிரமணியம் மற்றும் அமரர் வி. கயிலாசபிள்ளை உட்பட பலருடன் இணைந்து நிறுவுவதில் வெற்றிகண்டவர் திரு. கந்தையா நீலகண்டன். இவரது காலத்தில் யாழ்ப்பாணம் நல்லூரில் மாமன்றக் கிளை அலுவலகம் நிறுவப் பட்டமையும், முறிகண்டியில் சரவணப் பொய்கை என்ற பெயரில் கட்டடம் நிறுவப்படுவதும் அதேபோல் நாட்டின் பல பகுதிகளில் மாமன்ற செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படுவதும் அவரது ஆற்றல் மிகுவழிகாட்டலென்பது குறிப்பிடத்தக்கது.

கல்விப் பணியைப் பொறுத்த வரை மாமன்றக் கல்விக் குழுவின் செயற்பாடுகளுக்கு ஊக்கமும், உந்துதலும் தந்தவர் திரு.நீலகண்டன் என்பதை அதன் செயலாளராகச் செயற்படுபவன் என்ற முறையில் உறுதியாகக் கூற முடிகின்றது. இன்று நாடு முழுவதுமாக இந்துப் பிள்ளைகளுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்களது சமய அறிவை மேம்படுத்த நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். எதிர்வரும் காலங்களில் அனைத்துப் பாடங்களுக்கும் இது போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளோம். இவ்வாறான கல்விப்பணிகளைத் தளராது மேற்கொள்ள ஊக்கமும், உதவியும் ஒத்துழைப்பும் மாமன்றத் தலைவர் என்ற முறையில் அமரர் நீலகண்டன் தயங்காது வழங்கினார். நாட்டின் கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தர வகுப்பிலும், அதேபரீட்சையிலும் இந்துநாகரிகம் ஒருபாடமாக இருந்த போதிலும் அதற்கான பாடநூல் ஒன்று இருக்காமை ஒரு குறையாகவிருந்து வந்தது. அக்குறையை நீக்க பாடத்திட்டத்தோடிணைந்த பாட நூலொன்றைத் தயாரித்து வெளியிட எமக்கு பல வழிகளிலும் திரு.நீலகண்டன் உதவினார். அதற்கு இந்து மாணவ சமுதாயம் என்றும் நன்றியுடையதாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் குடாநாட்டில் திருவாசக அரண்மனை




கோண்டாவில் சிவபூமி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் நாவற்குழியில் திருவாசக அரண்மனை ஒன்று நிறுவப்படவிருக்கிறது. ஏ9 நெடுஞ்சாலையில் நாவற்குழி புகையிரத நிலையத்திற்கு சமீபமாக அமைந்துள்ள காணியில் இதற்கான கட்டடவேலைகள் நடைபெற்று வருகின்றன. கருங்கல்லில் திருவாசகப் பாடல்கள் பொறிக்கப்பட்டு மண்டபத்தின் உட்பகுதியினது இரு பக்கச் சுவர்களிலும் அவை பொருத்தப்பட்டு வருவது சிறப்பு அம்சமாக அமைந்துள்ளது. இங்கு தெட்சணாமூர்த்திக்கு கோயில் ஒன்றும், முன்பகுதியில் முற்றிலும் கருங்கற்களிலான இரதம் ஒன்றும் இந்திய சிற்பக் கலைஞர்களினால் வடிவமைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. மேற்படி திருவாசக அரண்மனை புதுவருடப் பிறப்புடன் திறந்து வைக்கப்படவிருப்பதாக சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள் தெரிவித்துள்ளார்

# சிவபூமி மனவிருத்திப் பாடசாலை, கோண்டாவில்



பிறப்பிலேயே மனவளர்ச்சிக் குறைபாட்டுடன் பிறந்த குழந்தைகளை ஆற்றுப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டு இயங்கி வரும் சிவபூமி மனவிருத்திப் பாடசாலைக்கு வைத்தியகலாநிதி. ச. குகதாசன் தம்பதிகளின் உறவினரான திருமதி லீலாவதி சுப்ரமணியம் அவர்களினது குடும்பத்தவர்களினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் 2013ஆம் ஆண்டு ஆவணி சதுர்த்தி நன்னாளில் அடிக்கல் நாட்டப்பட்டது. வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் வசித்துவரும் நல்லுள்ளம் கொண்ட எமது உடன் பிறப்புகளின் நிதியுதவியுடனும் சேவை மனப்பான்மை கொண்ட அன்பர்களின் கூட்டுமுயற்சியாலும் உருவாக்கம்பெற்று 02.07.2004இல் 12 மனவளர்ச்சி குன்றிய சிறுவர்களுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிவபூமி பாடசாலை இன்று 300க்கும் மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளை உள்வாங்கி அவர்களுக்கான கல்வியை ஊட்டி எமது சமுதாயத்தில் ஏனைய சிறுவர்களைப்போல் சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழவைக்கும் நற்பணியை சிவபூமி அறக்கட்டளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

# சிவபூமி மடம் - கீரிமலை



சரித்திரப் பிரசித்தி பெற்ற கீரிமலைக் கடற்கரை அருகே அமரர் விஸ்வநாதன் (ஆசிரியர்) அவர்களது குடும்பத்தின் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற காணியில் சிவபூமி மடம் அமைக்கப்பட்டு 2012 தை மாதத்தில் திறந்துவைக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குனி மாதத்தின் குருபூசை தினங்கள்



### திருவள்ளுவர் (03.03.2018)

உலக தத்துவங்கள் அனைத்தையும் திருக்குறள் என்னும் உன்னத படைப்பின் ஊடாக ஈரடியில் எடுத்துச் சொன்னவர் திருவள்ளுவர். உலகப் பொதுமறை, தெய்வ நூல், பொய்யா மொழி என பல பெயர்களால் சிறப்பித்து அழைக்கப்படும் திருக்குறள் உலகப் புகழ்பெற்ற நூலாக பல்வேறு மொழிகளிலும் வெளிவந்திருப்பது சிறப்புக்குரியது. இத்தகைய பெருமை வாய்ந்த திருக்குறள் தந்த திருவள்ளுவரின் குருபூசை தினம் இம்மாதம் மூன்றாம் திகதியாகும்.

### குழந்தைவேல் சுவாமிகள் (18.03.2018)

ஈழத்து சித்தர்களில் ஒருவராகப் போற்றப்படும் குழந்தைவேல் சுவாமிகள் ஏற்கனவே அரச உத்தியோகத்தில் இருந்தவர். இவர் ஈழத்து சித்தர் பரம்பரையில் முதலாவதாக தோன்றிய கடையிற் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு துறவற நிலை பெற்றவர். இறுதிக் காலத்தில் வண்ணார் பண்ணையில் தங்கியிருந்த போது 1909ஆம் ஆண்டு பங்குனி மாதம் 8ஆம் திகதி உத்தரட்டாதி நட்சத்திர நாளில் மகா சமாதியானார். இம்மாதம் 18ஆம் திகதியன்று இவரது குருபூசை தினமாகும்.



### செல்லப்பா சுவாமிகள் (20.03.2018)

நல்லூர் தேரடி சித்தர் என சைவமக்களால் போற்றப்பட்டவர் செல்லப்பா சுவாமிகள். இவர் கடையிற்சுவாமிகளின் சீடர்களுள் ஒருவர். நல்லைக் கந்தன் ஆலய தேர்முட்டி மண்டபத்திற்கு அருகிலிருந்த வில்வ மரத்தடியிலேயே இவர் தியானம் செய்வது வழக்கம். அந்தவேளையில்தான் ஒருநாள் இவரை தரிசிக்க வந்த யோகர் சுவாமிகளை ஆட்கொண்டு தனது சீடராக்கிக் கொண்டார். செல்லப்பா சுவாமிகளின் நினைவாலயம் நல்லைக் கந்தன் ஆலய முன்வீதி தென்கிழக்கு மூலையில் அமைந்துள்ளது. இம்மாதம் 20ஆம் திகதி இவரது குருபூசை தினமாகும்.

### யோகர் சுவாமிகள் (27.03.2018)

யாழ்ப்பாணத்து மாமுனிவர் என சிறப்பித்துப் போற்றப்பட்டவர் யோகர் சுவாமிகள். செல்லப்பா சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு அவரை தனது குருவாக ஏற்றுக்கொண்ட யோகர் சுவாமிகள் ஒரு சீடர் பரம்பரை உருவாகுவதற்கு வழிகாட்டியாகவிருந்த மகான். இவர் 1964ஆம் ஆண்டு பங்குனி மாத ஆயிலிய நட்சத்திர தினத்தன்று தனது 91வது வயதில் மகாசமாதியானார். இம்மாதம் 27ஆம் திகதியன்று இவரது குருபூசை தினமாகும்.





### நல்லைக் குருமணி சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் *(25.03.2018)*

இலங்கையின் முதலாவது சைவ ஆதீனமாக முக்கியத்துவம் பெறும் நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தை தோற்றுவித்த பெருமைக்குரியவர் சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள். 1966ஆம் ஆண்டு தோற்றம் பெற்ற நல்லை ஆதீனத்தின் முதலாவது குருமகா சந்நிதானமாக இவரே விளங்கினார். 1981ஆம் ஆண்டு பங்குனி மாதம் திருவாதிரை நட்சத்திர நாளன்று மகா சமாதியானார். இம்மாதம் 25ஆம் திகதியன்று இவரது குருபூசை தினமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்



தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தான வடக்கு வாசல் கோபுர மகா கும்பாபிஷேக நிகழ்வின் போது சிவாச்சாரியர்கள், கட்டட ஸ்தபதிகள் கௌரவிப்பும், கும்பாபிஷேக மலர் வெளியீட்டு வைபவமும் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. *(28.01.2018)*



சிவராத்திரி தினத்தன்று கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டத்தில் நடைபெற்ற பூசை வழிபாடு



அகில இலங்கை இந்து மாமன்றம் தெய்வத்திருமகள் சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது நினைவாகவும், 21வது ஆண்டு நிறைவாகவும் வெளியிட்ட இந்து ஒளி சிறப்பிதழ் வெளியீடு மற்றும் 2018-19ஆம் ஆண்டுக்கான கையடக்கப் பஞ்சாங்கம் வெளியீட்டு நிகழ்வுகள் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெற்றது. (21.01.2018)



சிவபூமிக்கு வருகை தந்த அவுஸ்திரேலியா பாராளுமன்ற உறுப்பினர்களான ***Julia Finn , Jodi mckay*** ஆகிய இருவரும் பிள்ளைகளுடன் கலந்துரையாடி, தொழிற்பயிற்சியில் ஈடுபட்ட சிறார்களின் முயற்சியை பாராட்டி பார்வையிட்டனர். (26.02.2018)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவஞ்சலி



எங்கள் சிவபூமி அறக்கட்டளை வளர்ச்சியில் பெரும் துணைநலமாக விளங்கிய

## உயர்திரு கந்தையா நீலகண்டன்

அவர்களது பிரிவு குறித்து மிகுந்த கவலையடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தி பெற திருக்கேதீஸ்வரப் பெருமானின் திருவடியை வணங்குகின்றோம்.

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த செய்தி பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது
ISBN 978-955-7420-00-4